Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, JULY 10, 2021

வெள்ளிக்கிழமை ஜூலை 10, 2021 | ஒளி: 07 கதிர் 44 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## ஒக்டோபரில் இரு பரீட்சைகள்




ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஆகிய பரீட்சைகளுக்கான திகதிகளை, கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## ‘செப்டெம்பருக்கு முன்னர் பெருமளவானோருக்கு தடுப்பூசி’

தற்போது கணிசமான சதவீதமானவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதால், பொருளாதார நடவடிக்கைகளுக்காக அதிக சந்தர்ப்பத்தை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பணித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, சனத்தொகையில் பெருமளவானோருக்கு செப்டெம்பர் மாதத்துக்கு முன்னர் தடுப்பூசி பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

மொட்டை

# ‘கை’ விடுகிறது

### இளம் முகங்களுக்காக அமைச்சரவையில் விரைவில் மாற்றம்?

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் பிரதான பங்காளிகளின் ஒன்றான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது தொடர்பில் கலந்தாலோசித்து வருகிறதென தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2




## அரசாங்கத்துக்கு எதிராக யாழில் இன்று கவனயீர்ப்பு

■ நிதர்ஷன் வினோத்

அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்டித்து, யாழ்ப்பாணத்தில், இன்று (10) கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்படுமென புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தலைவர் சி.க.செந்தில்வேல் அறிவித்துள்ளார். “தற்போது நாட்டிலுள்ள அரசியல் நிலைமையானது மக்களுக்கு விரோதமான செயற்பாடாகவும் மக்களுக்கு எதிரான செயலாகவும் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது” என்றார்.

தொடர்ச்சி P2

## ‘இணையவழியில் இனி இணையோம்’




■ வா.கிருஸ்ணா


அரசாங்கத்தின் அடக்குமுறைகளை கண்டித்து, இணையவழி கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து ஆசிரியர்கள் விலகியிருக்க தீர்மானித்துள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் க.உதயரூபன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஆர்ப்பாட்டத்தை தடுப்பது அடிப்படை உரிமை மீறல்

### 3 மனுக்களை தாக்கல் செய்தது ஐ.ம.ச

தனிமைப்படுத்தல் விதிகளை பயன்படுத்தி, ஆர்ப்பாட்டங்களை தடுப்பதற்கு பொலிஸார் முயற்சிப்பதனூடாக தங்களுடைய அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதாக உத்தரவிடக் கோரி, ஐக்கிய மக்கள் சக்தியினர், மூன்று மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.



தொடர்ச்சி P2




## மஸ்கெலியாவுக்கு நிவாரணம்; வவுனியாவில் விசாரணை

■ க. அகரன்

தமிழ்த் தேசிய முன்னணியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தரான ப.தவபாலனை, பொலிஸார் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

15 வயதான சிறுமி விவகாரம்:

## 4 பேருக்குப் பிணை

15 வயது சிறுமியை பாலியல் நடவடிக்கைக்கு பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்போரில், நால்வர், கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தால் நேற்று (09) பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடற்படை மருத்துவர், மிஹிந்தலை பிரதேச சபையின் உப தவிசாளர் மற்றும் இரத்தினக்கல் வியாபாரிகள் இருவரே, இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள், தலா 25,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும் தலா 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன், இது போன்ற புகார்கள் மீண்டும் வந்தால் அவர்களது பிணை இரத்துச் செய்யப்படும் எனவும் எச்சரித்த நீதவான், ஓகஸ்ட் 19ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் சந்தேகநபர்களுக்கு உத்தரவிட்டார்.



## மஹிந்த- ரணில் இராப்போஷனம்

பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எம்.யுமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் முக்கியமான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (08) இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகரொருவரின் வீட்டிலேயே இராப்போசனம் வழங்கப்பட்டுள்ளது. அந்த வர்த்தகர், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உறவினராவார். இந்த இராப்போசனத்தில், பிரதமரின் பாரியாரும் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது, முன்னாள், இந்நாள் பிரதமர்கள் பல முக்கியமான விடயங்கள் குறித்து, கலந்துரையாடினர் என அறியமுடிகின்றது.



## பெசிலிடம் இருந்தவை மஹிந்தவுக்கு மாற்றம்

### 51 நிறுவனங்கள் பெசிலிடம் இருந்தன

நிதியமைச்சராக நியமிக்கப்பட்ட பெசில் ராஜபக்‌ஷவுக்கு கீழிருந்த நிறுவனங்கள் சில, பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவின் கீழிருக்கும் பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துதல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இதற்கான, சட்ட கட்டமைப்பை திருத்தி சிறப்பு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



சட்ட விரோத மணல் அகழ்வு;

## 13 படகுகளுடன் மூவர் சிக்கினர்

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங்கேணி, ஈச்சந்தீவுப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களால் கைவிட்டுச் செல்லப்பட்ட 13 படகுகள், பொலிஸாரால் நேற்று (09) கைப்பற்றப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## ‘ராணி’யை பார்க்க அலைமோதும் மக்கள்

பங்காளதேஷ் தலைநகர் டாக்காவுக்கு 30 கிலோமீற்றர் தொலைவில், சாரிகிராமிலுள்ள பண்ணையில், ’ராணி’ என பெயரிடப்பட்ட குள்ளமான பசுவின் படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

தொடர்ச்சி P2



## உள்ளே

3. கண்டால் வரசொல்லுங்க...
4. வடக்கில் ‘லீ’ பின்னணி
4. அம்பலமாக்கிய அக்கினிக் குஞ்சு
5. நமது பிள்ளைக்கு யாரோ பெயர் வைப்பதா
8. வயிரு எங்க கேட்டுச்சு
8. சிரட்டையும் சொல்லாதோ கவி

PAGE 1 தொடர்ச்சிகள்

## ‘செப்டெம்பருக்கு முன்னர் பெருமளவானோருக்கு தடுப்பூசி’

தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்த கொவிட்-19 ஒழிப்பு விசேட குழுவுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (09) இடம்பெற்ற சந்திப்பின் போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவும் ஆபத்து அடையாளம் காணப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து, ஜூலை மாதத்துக்குள் கிடைக்கும் தடுப்பூசிகளை அம்மக்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், ஜூலை 11ஆம் திகதி கிடைக்கவிருக்கும் 2 மில்லியன் சைனோஃபார்ம் தடுப்பூசிகளை, கொழும்பு மாவட்டத்துக்கு 2 இலட்சம், கம்பஹாவுக்கு 5 இலட்சம், களுத்துறைக்கு 5 இலட்சம் என்ற அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர், மேல் மாகாணத்தில் உள்ள 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்கி முடிக்கப்பட வேண்டும் என்று, ஜனாதிபதி தெரிவித்தார்.

காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம், நுவரெலியா, இரத்தினபுரி, பதுளை, மாத்தளை மாவட்டங்களுக்குத் தலா ஒரு இலட்சம் தடுப்பூசிகளும் குருநாகல் மாவட்டத்துக்கு இரண்டு இலட்சம் தடுப்பூசிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தத் தடுப்பூசிகளை, முறையாகவும் விரைவாகவும் வழங்க வேண்டியதன் அவசியத்தை, சுகாதாரத் துறையினருக்கு ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

அடுத்த இரண்டு வாரங்களில், 1.47 மில்லியன் அஸ்ட்ரா செனெகா தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன. இவற்றில் 6 இலட்சம் தடுப்பூசிகள், ஏற்கெனவே முதலாவது டோஸ் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்ட கொழும்பு மாவட்ட மக்களுக்கு ஒதுக்கப்படும்.

மீதமுள்ளவற்றை, கேகாலை மாவட்ட மக்களுக்காக, முதலாவது மற்றும் இரண்டாவது டோஸ்களுக்கென வழங்குமாறும், ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

தற்போது கிடைக்கப்பெற்றுள்ள ஃபைசர் தடுப்பூசிகளை, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கும் மொடர்னா தடுப்பூசிகளைக் கண்டி மாவட்டத்துக்கும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் பின்னர் கிடைக்கவிருக்கும் தடுப்பூசிகளை, கொவிட் பரவலைக் கருத்திற்கொண்டு, விஞ்ஞானபூர்வமாக விநியோகிக்க முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை, தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் குறித்தும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்தும், தூதரகங்களுக்கு விளக்கமளிக்க வேண்டியதன் தேவை பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ‘இணையவழியில் இனி இணையோம்’

> இணையவழி கல்வி நடவடிக்கைகளிலிருந்து விலகிக்கொள்ள தீர்மானித்துள்ளோம். இது தொடர்பான தீர்மானத்தை, எமது மத்திய குழு எடுத்துள்ளது

“கைது செய்யப்பட்டு, பிணையில் விக்கப்பட்ட, எமது சங்கத்தின் பொதுச் செயலாளர், தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவருடன் சேர்ந்து 30க்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்” என்றார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, மேற்கண்டவாறு தெரிவித்த அவர், அரசாங்கத்தின் அடக்குமுறைமை கண்டித்தே இவ்வாறான தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

“இது, சுயாதீன நீதிச் சேவையைக் கேள்விக்குள்ளாக்கும் விடயமாகும். நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்பும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் தனிமைப்படுத்தியிருப்பது கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

“இலங்கையில் இறையாண்மைக்கு இந்தச் சம்பவம் ஒரு சவாலாக இருக்கின்றது. தற்போதைய நிலையில் ஊடகங்களின் சுதந்திரமும் பறிக்கப்பட்டு, எமது கருத்துச் சுதந்திரங்களும் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளன.

“மாணவர்களின் உரிமைகள் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் குரல்கொடுத்து வந்திருக்கின்றது. பல்கலைக்கழக மாணவர்களின் நியாயமான போராட்டத்தை நியாயப்படுத்தியே எமது சங்கத்தின் பொதுச் செயலாளர், கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தியிருந்தார்.

“தற்போது, ஜோன் கொத்தலாவல கல்வி நிலையத்தை, ஒரு தனியார் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

“கடந்த காலங்களில் சைட்டம் என்ற தனியார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், சுயாதீன கல்வியை வலிறுத்துவதற்காக பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர் சங்கம் சேர்ந்து பல கவனயீர்ப்புப் போராட்ங்கள் மூலம் அழுத்தம் கொடுத்தமையால் அது கைவிடப்பட்டது.

“கல்விப் புலத்தில் உள்ளவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட அடாவடித்தனங்களை நாங்கள் எதிர்க்கின்றோம். இதற்காகவே, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக நாங்கள் முன்னெடுத்துவந்த இணையவழி கல்வி நடவடிக்கைகளிலிருந்து விலகிக்கொள்ள தீர்மானித்துள்ளோம். இது தொடர்பான தீர்மானத்தை, எமது மத்திய குழு எடுத்துள்ளது” என்றார்

## பெசிலிடம் இருந்தவை மஹிந்தவுக்கு மாற்றம்

நிதியமைச்சராக பெசில் ராஜபக்‌ஷவும், பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துதல் அமைச்சராக பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவும், நேற்று முன்தினம் (08) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ‘கை’ விடுகிறது

ஏனைய பங்காளிகளில், அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினருக்கும் இடையில் கடுமையான கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

இந்நிலையில், அரசாங்கத்திலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஓரங்கட்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக, சுதந்திரக் கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதனிடையே, இளம் உறுப்பினர்களுக்கு இடமளிக்கும் வகையில், முழுமையான அமைச்சரவை மாற்றமொன்றை விரைவில் மேற்கொள்வதற்கு அரசாங்கம் கலந்தாலோசித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த மாற்றத்தின் போது, தாமரை மொட்டுவைச் சின்னமாகக் கொண்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதிக்கத்தை அமைச்சரவைக்குள் அதிகரித்துக் கொள்ளும் வகையிலேயே மாற்றங்கள் செய்யப்படும் எனவும், கையை சின்னமாகக் கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் ஓரங்கட்டப்படக் கூடுமெனவும் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், அவ்வாறு ஓரம் கட்டப்படுவதற்கு முன்னர், தாங்களாகவே அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்வதே உசித்தமானதாக இருக்குமென ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் கதைகள் அடிபடுகின்றனவென அறியமுடிகின்றது.

அதனோர் அங்கமாகவே, கட்சியின் தலைமை தன்னை விலகுமாறு கேட்டால், கட்சியின் மத்தியக்குழு விலகவேண்டுமென தீர்மானித்தால், தன்னுடைய பதவியை எந்நேரத்தில் துறப்பதற்குத் தயாராக இருப்பதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தையும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவையும் ஆட்சியதிகாரத்துக்கு கொண்டுவருவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியே பெரும்பாடுபட்டது என்பதை நினைவுப்படுத்திய தயாசிறி ஜயசேகர, பழையவற்றை மறந்துவிடக்கூடாது என்றார்.

இதனடிடையே, கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில், சுதந்திரக் கட்சியின் மத்தியக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் (08) கட்சியின் தலைமையகத்தில் கூடியது.

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நிலைமைகளின் அடிப்படையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் அரசாங்கத்துடன் இருக்கவேண்டுமா என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரசாங்கத்திலிருந்து விலக வேண்டுமென மத்தியக் குழு உறுப்பினர்கள் பலரும் வலியுறுத்தியுள்ளனர். எனினும்,

> குறுகிய காலப்பகுதியில் திறமைகளை வெளிப்படுத்திய, முன்னேற்றத்தை காண்பித்த இராஜாங்க அல்லது பிரதியமைச்சர்களுக்கு இதன்போது முன்னுரிமை கொடுப்பது தொடர்பிலும் அரசாங்கம் ஆலோசித்துள்ளதாக அறியமுடிகின்றது

நெருக்கடியான நிலைமையில், தேர்தலொன்று இல்லாத சூழ்நிலையில், அரசாங்கத்திலிருந்து விலகவும் உசிதமானதல்ல என மற்றுமொரு பிரிவினர் எடுத்துரைத்துள்ளனர்.

எவ்வாறான நிலைமைகள் ஏற்படினும், கட்சியைப் பலப்படுத்தி, மக்களிடத்தில் செல்லவேண்டுமென சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.


இதற்கிடையே, கடமைகளையும் பொறுப்புகளையும் முறையாக முன்னெடுக்காத அமைச்சர்களை, அவ்வமைச்சிலிருந்து நீக்கிவிட்டு புதிய முகங்களுக்கு அதுவும் இளம் உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாகவும் அறியமுடிகின்றது.

குறுகிய காலப்பகுதியில் திறமைகளை வெளிப்படுத்திய, முன்னேற்றத்தை காண்பித்த இராஜாங்க அல்லது பிரதியமைச்சர்களுக்கு இதன்போது முன்னுரிமை கொடுப்பது தொடர்பிலும் அரசாங்கம் ஆலோசித்துள்ளதாக அறியமுடிகின்றது.

அவ்வாறாதொரு நிலைமை ஏற்படுமாயின் அரசாங்கத்துடன் முட்டிமோடிதிக் கொண்டிருக்கும் பங்காளிகள், ஓரங்கட்டப்படக்கூடும் அல்லது பெயரளவில் ஏதாவது பொறுப்புகள் வழங்கப்படலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நிதியமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர், தன்னுடைய அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட பெசில் ராஜபக்‌ஷ, “கசப்பான தீர்மானங்களை எடுப்பேன்” என பகிரங்கமாக அறிவித்துள்ளார். ஆகையால், அரசாங்கத்துக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளை களையும் வகையிலும் தீர்மானங்கள் எதிர்காலத்தில் எடுக்கப்படலாமென அறியமுடிகின்றது.

## ஆர்ப்பாட்டத்தை தடுப்பது அடிப்படை உரிமை மீறல்



உயர்நீதிமன்றத்திலேயே இந்த மூன்று மனுக்களையும் நேற்று (09) தாக்கல் செய்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார எம்.பி, பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷன ராஜகருணா மற்றும் மயந்த திசாநாயக்க ஆகியோரால் இந்த மனுக்கல் உயர்நீதிமன்றத்தில் நேற்று (09) தாக்கல் செய்யப்பட்டன.

மனுக்களில், பொலிஸ்மா அதிபர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சுகாதார அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரை தனிமைப்படுத்தல் விதிமுறைகளின் போர்வையில் கைது செய்து தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துகின்றனர். இது, இலங்கை அரசியலமைப்பின் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை முற்றாக மீறும் செயலாகுமென மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

> உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உத்தரவிடுமாறும் மனுதாரர்கள் கோரியுள்ளனர்

ஆகையால், பிரதிவாதிகளை மன்றுக்கு அறிவித்து, மனுக்களை விசாரணைக்கு உட்படுத்தி, தங்களுடைய அடிப்படைய உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உத்தரவிடுமாறும் மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

## ஒக்டோபரில் இரு பரீட்சைகள்

அதனடிப்படையில், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதியன்றும் உயர்தரப் பரீட்சைகள், ஒக்டோபர் 04ஆம் திகதி முதல் ஒக்டோபர் 31ஆம் திகதி வரையிலும் நடைபெறும் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

## அரசாங்கத்துக்கு எதிராக யாழில் இன்று கவனயீர்ப்பு

> மக்களையும் இணைத்துக்கொண்டே இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும்

யாழ்ப்பாணத்தில் நேற்று (09) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், நாட்டில் இன்று ஜனநாயக ஆட்சியில்லை. ஒரு தனிநபர் சர்வாதிகாரம், தனி கட்சியினுடைய சர்வாதிகாரமாக, ஒரு குடும்பத்தினுடைய சர்வாதிகாரமாகவே ஆட்சி இருக்கிறது என்றார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உள்ளிட்ட பொருள்களின் விலைகளால் தலையைத் தூக்கமுடியவில்லை எனத் தெரிவித்த அவர், தானிய வகைகளின் விலைகளும் உயர்வடைந்து காணப்படுகிறது என்றார்.

“கொரோனா என்றும் திரை மறைவில் நமது நாடு விற்கப்படுகின்றது. தரை மட்டுமன்றி கடலும் இந்த அரசாங்கத்தால், அந்நிய நாடுகளுக்கு விற்கப்படுகிறது” எனத் தெரிவித்த அவர், “நாட்டு வளங்கள் சூறையாடப்படுவதை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே நாளைய (இன்றை) போராட்டம் அமையும்” என்றார்.

“சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய, பொதுமக்களையும் இணைத்துக்கொண்டே இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும்” என்றார்.

## மஸ்கெலியாவுக்கு நிவாரணம்; வவுனியாவில் விசாரணை

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த வறுமைக்குட்பட்ட மக்களுக்கு, தன்னார்வாளர்களால் பல உதவிகள், கடந்த காலங்களில் வழங்கப்பட்டிருந்தன.

அந்தவகையில், மஸ்கெலியா பகுதியில் கொரோனா இடர்காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வவுனியாவில் பொருள்களை சேகரித்து, தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனி ஊடாக ப.தவபாலன் முன்னின்று வழங்கியிருந்தார்.

இவ்வாறான உதவியை மேற்கொண்டமைக்காக மேற்படி அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பணியின் நிமித்தம் தான் வெளியே சென்றிருந்த வேளை, தனது வீட்டுக்குச் சென்ற பொலிஸார், தனி சிங்கள மொழியில் மாத்திரம் எழுதப்பட்ட அழைப்பாணையை வழங்கிச் சென்றுள்ளதாகவும் அதில் எதிர்வரும் 12ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 13 படகுகளுடன் மூவர் சிக்கினர்

அத்தோடு, மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சட்டவிரோதமாக மணல் அகழ்வு முன்னெடுக்கப்பட்ட இடத்தைப் பொலிஸார் முற்றுகையிட்ட போது, அங்கிருந்த பலர் பதறியடித்து சிதறியோடித் தலைமறைவாகியுள்ளனர்.

இதன்போது, மூவரைக் கைதுசெய்துள்ளதாகத் தெரிவித்த கிண்ணியா பொலிஸார், ஏனையவர்களையும் கைதுசெய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து வருவதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## ‘ராணி’யை பார்க்க அலைமோதும் மக்கள்

அக்கிராமத்திலுள்ள ஷிகோர் என்பவரின் பண்ணையில் இப்பசு உள்ளது.

26 கிலோகிராம் எடையுடைய இந்தப் பசு, 51 சென்றிமீற்றர் நீளமானது. கின்னஸ் உலக சாதனை படைத்த மிகச்சிறிய பசுவை விட, ராணி 10 சென்றிமீற்றர் குறைவானது எனத் தெரிவித்துள்ள அதன் உரிமையாளர், இந்தப் பசுதான் உலகிலேயே குள்ளமான பசு என்கின்றனர்.

பங்களாதேஷில் கொரோனா தாண்டவமாடிக்கொ ண்டிருக்கின்றது. எனினும், கொரோனா ஊரடங்குக் கட்டுப்பாடுகளை மீறி இந்தப் பசுவை பார்வையிடுவதற்கு ஆயிரக்கணக்கானோர் அந்தப் பண்ணைக்கு வந்து செல்கின்றனர்.

அவ்வாறு வருகைதருபவர்கள், பசுவுடன் செல்பி எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர். எனினும், கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக, பார்வையாளர்களை அனுமதிக்க வேண்டாம் என, பண்ணை உரிமையாளரிடம் சுகாதாரத் துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கேரளாவைச் சேர்ந்த, 61 சென்றிமீற்றர் உயரமுடைய மாணிக்கம் என்ற பசுவே, உலகின் குள்ளமான பசுவாகும் என 2014ஆம் ஆண்டு கின்னஸ் உலக சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






# கண்டால் வரச்சொல்லுங்க



மகேஸ்வரி விஜயனந்தன்
mayurisaai@gmail.com

**எதிர்ப்புப் போராட்டம் என்பது, சமூக , அரசியல், பொருளாதார உரிமை மறுப்புகள், வன்முறை, அதிகார கட்டுப்படுத்தல்கள், சுரண்டல்கள் அநீதிகளுக்கு எதிராக தனிமனிதராக அல்லது குழுக்களாக எதிர்க்கும் ஒரு வழிமுறை ஆகும்.**

இன்று உலகை கொரோனா தனது கைப்பிடிக்குள் சுருக்கிப் பிடித்துக் கொண்டாலும் கொரானாவாவது, கொக்காவது என்ற புறக் கணிப்புக்கு மத்தியில் போராட்டங்கள் நாளுக்கு நாள் வலுப்பெற்று தான் வருகின்றன.

எனவே, இந்த போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களுக்கு எமது இலங்கையும் விதிவிலக்கல்ல. நாட்டின் இன்றைய நிலைமையில், நான்கு திசைகளிலும் ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கரிக்கத் தொடங்கியுள்ளன.

பத்திரிகைகளைப் புரட்ட முடியவில்லை. தொலைக்காட்சி செய்திகளையோ, வானொலி செய்திகளையோ சமூக வலைத்தலங்களோ எதை, எப்போது பார்த்தாலும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் தான்.

இவ்வாறான நிலையில், நாளுக்கு நாள் வலுப்பெறும் இந்த ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் எமது அரசாங்கத்துக்கு ஆப்பாக மாறி விடும் என்ற அச்சத்தாலோ என்னவோ

கொரோனா தொற்றை காரணம் காட்டி, தனிமைப்படுத்தல் சட்டத்தை அடிப்படையாக வைத்து, இந்த மாதம் 6ஆம் திகதி யிலிருந்து அரசாங்கம் ஆர்ப்பாட்டங்களுக்கு தடைவிதித்திருந்தாலும் இவற்றைப் துளியளவேனும் பொருட்படுத்தாமல் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் வகைதொகையின்றி முன்னெடுக்கப்படுகின்றன.

ஒரு புறம் விவசாயத்துக்கு சாவு மணி அடிக்கப்பட்டுள்ள இரசாயன உர இறக்குமதிக்கு எதிராக விவசாயிகளும் இலவச கல்வியை தனியார் மயப்படுத்த அரசாங்கம், பாராளுமன்றத்தில் முன்வைத்துள்ள சட்ட மூலத்துக்கு எதிராக மற்றொரு சாராரும், கொரோனாவால் முடக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்கள் தமக்கு உண்ண உணவின்றி பட்டியானால் வாடுவதாக தெரிவித்தும், பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் இணையவழி ஊடாக முன்னெடுக்கப்படும் கற்றல் செயற்பாடுகள் தமது பிள்ளைகளுக்கு எட்டாக்கனியாக உள்ளதாக தெரிவித்து பெற்றோரும் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில்,

போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களே தமது வாழ்க்கையாகிப் போன மலையகத் தோட்டத் தொழிலாளர்களோ தமக்கு எதிராக தோட்ட நிர்வாகங்களால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அடக்குமுறைகள் அழுத்தங்களுக்கு எதிராக போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் கேட்பார், பார்ப்பாரின்றி அனாதைகளாக முன்னெடுத்து வருகின்றனர்.

உழைப்பையும் உயிரையும் மண்ணுக்கு அர்ப்பணித்து தமது உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காமல், உணவுக்கு வருவாய் கிடைக்காமல், காடு, மழை ஏறி மாடாய் ,சொற்ப வருமானத்துக்காக உழைத்து, நிம்மதியாய் படுத்துறங்க தமக்கென சொந்தமான நான்கு சுவரில்லாமல் போராட்டமே வாழ்வின் அங்கமாய் மாறிப் போன மலையக மக்களின், போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் இன்று நேற்றல்ல, இலங்கையின் சுதந்திரத்துக்கு முன்பிருந்தே ஆரம்பமானதே எனலாம்.

200 வருட வரலாற்றைக் கொண்ட மலையக சமூகம் 100 வருடங்களாக நீண்ட போராட்டங்களை பல்வேறு காலகட்டங்களிலும் முன்னெடுத்து வந்துள்ளனர். இவர்களின் முதலாவது போராட்டம் சுதந்திரத்துக்கு முன்பே அதாவது, 1919ஆம் ஆண்டு பதிவாகியுள்ளது . சேர். பொன்னம்பலம் அருணாசலம், பெரிய சுந்தரமும் இணைந்து தோட்டத் தொழிலாளாலர் சம்மேளனம் ஒன்றை உருவாக்கி மலையக மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்காக குரல் எழுப்ப ஆரம்பித்த போராட்டம் இன்றும் வடிவங்கள் மாறியும் தொடரத்தான் செய்கின்றன.

1939ஆம் ஆண்டு ஹேவாஎட்ட முல்லோயாப் போராட்டத்தில் அமரத்துவம் அடைந்த தியாகி முல்லோயா கோவிந்தனுடன் ஆரம்பமான மலையகப் போராட்ட தியாகிகளின் மரணப் பட்டியல் என்பது, எனது தேடலுக்கமைய 1979ஆம் ஆண்டு பல்லேகல தோட்டம் பழனிவேல் என்ற தியாகி வரை, கிட்டத்தட்ட 36 தோட்டத் தொழிலாளர்கள், தமது உரிமைகள், அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களால் கொல்லப்பட்டு அமரத்துவம் அடைந்துள்ளனர்.

எப்போதுமே போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மூலமே தமக்கான ஒவ்வொரு விடயங்களையம் பெற்றுக்கொண்டு, இன்று தமது இருப்புகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும், தமது உழைப்புக்கான ஊழியத்தைப் பெற்றுக்கொள்ளவும், தமது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தவும் தொழில் இடங்களில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தலும் போராட்டம் எனும் ஆயுத்தத்தை கையில் எடுத்தால் மாத்திரமே இவர்களின் கோரிக்கைகள் ஓரளவுக்காகவேனும் நிறைவேற்றப்படுகின்றன.

குறிப்பாக இன்று இலங்கையில் மிகவும் குறைந்த அடிப்படை சம்பளத்துக்கு தொழில் செய்யும் பாவப்பட்ட மக்களே மலையகத் தொழிலாளர்கள் . இதனால் தான் அண்மை சில வருடங்களாக தமது உழைப்புக்கேற்ற ஊதியத்தை வழங்கக் கோரி இவர்கள் முன்னெத்தப் போராட்டங்களின் விளைவு, 1000ரூபாய் நாளொன்றின் அடிப்படைச் சம்பளம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்து இவர்களது போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாக பலர் மார்தட்டினர்(தட்டுகின்றனர்.)



ஆனால் என்னதான் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெழும்பாக இம்மக்கள் காணப்பட்டாலும் இவர்களுக்கு தினமும் 1,000 ரூபாய் சம்பளத்தை வழங்குவதற்கு எந்த நிர்வாகமும் அவ்வளவு சீக்கிரத்தில் இணக்கம் தெரிவிக்கவில்லை.



பல நாள் இழுபறிகளுக்கு பின்னர் இணங்கினாலும் இலகுவில் எவ்வித நிபந்தனைகளும் இன்றி வழங்கிவிட நிர்வாகங்கள், கொடை வள்ளல்களோ, இலகிய மனம் படைத்தவர்களோ அல்ல என்பதை அண்மையச் சம்பவங்கள் பறைச்சாற்றும் நிலையில், நிர்வாகங்களின் அழுத்தங்கள் என்பது சில தொழிற்சங்கங்களுக்கும் தோட்ட கம்பனிகளுக்குமிடையிலான டீலாக இருக்குமோ என்ற அச்சத்தையும் இயல்பாகவே தோற்றுவிக்கின்றது.




1,000 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தை வழங்க நிர்வாகங்கள் எவ்வித நிபந்தனையும் விதிக்கவில்லை. அவ்வாறு விதிக்கவும் விட மாட்டோம். விதித்தால் பார்த்துக்கொண்டிருப்போமா என வாய்ச்சவடால் விட்ட அதிகாரத்திலிருக்கும் அரசியல்வாதிகள் எங்கே ? இன்று இந்த அரசியல்வாதிகளை "கண்டா வரச் சொல்லுங்க" என அனைவரும் வலைவிரித்து தேடிக்கொண்டிருக்கின்றனர்.



கொரோனா முடக்கத்தால் பொருளாதார ரீதியில் அனைவருமே ஆட்டம் கண்டுள்ள நிலையில், இந்த மலையக மக்களின் பொருளாதார நிலை எவ்வாறானதென்று எண்ணிக்கூடப் பார்க்க முடியாது.கொரோனாவால் சில தோட்டங்கள் முடக்கப்பட்டாலும் ஆயிரம் வேண்டுமா? அப்படியாயின் தினமும் 20 கிலோகிராம் கொழுந்தை பறிக்குமாறு அழுத்தம் விடுக்கப்படுகின்றன.



மறுபுறும் வேறு சில நிர்வாகங்கள் கிழமையில் 2 நாள்கள் வேலையையே வழங்குகின்றன. இவ்வாறான தோட்ட நிர்வாகங்களின் அழுத்தம் அடக்குமுறைக்கு எதிராக எந்தவொரு தொழிற்சங்கங்களின் உதவியும் இன்றி, தொழிலாளர்கள் போராட்டங்களையும் பணிபகிஷ்கரிப்புகளையும் தனித்து முன்னெடுத்து வருகின்றனர். ஒரு சில தோட்டங்களில் மாதக் கணக்கில் இப்பணிபகிஷ்கரிப்புகள் முன்னெடுக்கப்பட்டாலும் எந்தவொரு தொழிற்சங்கங்களும் இவர்களை ஏறெடுத்துக் கூட பார்க்காமல் இருப்பது ஆத்திரமூட்டும் செயலாகவே உள்ளது.



சில தொழிற்சங்கங்கள் எம்மிடம் அதிகாரமில்லை என ஒதுங்கினாலும் அதிகாரமிருக்கும் பிரபல தொழிற்சங்கங்கள் கூட 1,000 ரூபாய் வாங்கிக்கொடுத்து விட்டோம். இனி இவர்கள் எக்கேடு கெட்டுப்போனால் எமக்கென்ன. இவர்களின் சந்தாப் பணம் மாத்திரம் கிடைத்தால் போதும் என்ற அலட்சியத்தில் இருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது.



கொட்டியாக்கலை, கொட்டகலை-ட்ரேட்டன், ஹப்புத்தளை -தம்பேதன்ன உள்ளிட்ட பல தோட்டங்களில் நாள்கள் பல கடந்தும் பணிபகஷ்கரிப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் இதுவரை எந்தவொரு அதிகாரதரப்பு அரசியல்வாதியும் இம்மக்கள் பக்கம் தலை வைத்துக்கூட படுக்கவில்லை என தொழிலாளலர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.



சில வருடங்களுக்கு முன்பெல்லாம் மலையக தோட்டப் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் அவர்களது கோரிக்கைகள் மக்களுக்கு சார்பாகவே முடிந்த வரலாறுகளும் உள்ளன. அத்துடன் நிர்வாகங்களும் இவ்வாறான அடக்குமுறைகைளையோ அழுத்தங்களையோ தொழிலாளர்கள் மீது கட்டவிழ்த்து விடாமல் அடங்கிப் போன காலங்களும் உண்டு. இதற்கு சில தொழிற்சங்க தலைமைத்துவங்களும் காரணமாக அமைந்தது.



ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறிப்போய்விட்டது. தொழிற்சங்கங்கள் தோட்ட நிர்வாகங்களை தட்டிக்கேட்க திராணியற்றவர்களாக, தோட்ட நிர்வாகங்களுக்கு பயந்தோ அல்லது அடங்கியோ போகும் போக்கையே மலையகத்தில் காணமுடிகின்றது.

சில விடயங்களுக்கு அனுபவம் என்பது அவசியம் என்பதை சில விடயங்கள் ஆணித்தரமாக உணர்த்துகின்றன. இதற்கு சிறந்த உதாரணம் தான் சில வாரங்களுக்கு முன்னர் பொகவந்தலாவை கொட்டியாகலைத் தோட்டத்தில் தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக தொழிலாளர்கள் வீதிக்கு இறங்கினர். 20 கிலோ கொழுந்தை தொழிலாளர்கள் பறிக்க வேண்டும் என்ற விடயத்திலிருந்து அந்த நிர்வாகம் பின்வாங்காத நிலையில், அதிகாரமிக்க அரசியல்வாதி ஒருவர் கண்துடைப்புக்காக அங்கு சென்று தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாட முயன்ற போது, தோட்ட நிர்வாகம் குறித்த அரசியல்வாதியை புறக்கணித்து, தமது முடிவிலிருந்து கீழிறங்கவில்லை.

இந்த நிலையில், அந்த அரசியல்வாதியின்"நீங்கள் கொழுந்தை பறியுங்கள். நிர்வாகம் என்ன செய்துவிடும்" என வீராப்பு கதையைக் கேட்டு, மறுநாள் கொழுந்துப்பறிக்க தொழிலாளர்கள் சென்ற போது, பணிக்காக எந்தவொரு வெளிக்கள உத்தியோகத்தரும் வருகைத் தரவில்லை. இதனால் தாம் பறித்த கொழுந்தை தேயிலைத் தொழிற்சாலை முன்பாக கொட்டிவிட்டு, தொழிலாளர்கள் வீடு திரும்பியதே மிச்சம். இதில் மக்களின் உழைப்புக்கே நட்டம். அதன்பின்னர் கொட்டியாகல தோட்டத் தொழிலாளர்கள் இரண்டு நாள்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து, கொரோனா தொற்றால் கைவிட வேண்டிய நிலைக்குச் சென்ற போது கூட வீராப்பு பேசிய வாய்ச்சொல் அரசியல்வாதிகள் அந்தப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

அங்குமட்டுல்ல. கொட்டகலை, ஹப்புத்தளையிலும் இதே அவலம் தான். கொரோனா சட்டதிட்டங்களை காரணம் காட்டி, வீடுகளிலிருந்து பணிபகிஷ்கரிப்பை முன்னெடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பதுளை மாவட்ட அதிகாரதரப்பு அரசியல்வாதியொருவர், தமது பிரதேச மக்கள் நாள்கள் பல கடந்து பணிபகிஷ்கரிப்புகளை முன்னெடுக்கிறார்களே, நாளை வாக்குகளுக்காக இந்த மக்கள் காலடிக்கே செல்ல வேண்டும் என்ற நினைப்பு சிறிது கூட இல்லாமல், மீனவர் சமூகத்துக்காக குரல் கொடுக்க கிளம்பி விட்டாரென, ஹப்புத்தளை- தம்பேதன்ன தொழிலாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இதைவிட கொடுமை யாதெனில், தமது பிரச்சினைகள் தொடர்பில், தனியார் தொலைக்காட்சியொன்றில் கருத்துத் தெரிவித்த தொழிலாளர்கள் சிலர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள அவலம் லிந்துலை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

எனவே, இந்த அவலங்கள் எல்லாம், தமது மக்கள் பிரிதிநிதிகளின் காதுகளை எட்டவில்லையா? அல்லது தேர்தல் ஒன்றுக்கு இன்னும் சில வருடங்கள் செல்லும் என்பதால், அந்த நேரத்தில் மாத்திரம் மக்களை நாடிச் சென்றால் போதும் என்ற கொள்கையைக் கடை பிடிக்கின்றார்களா என்பதை நாமறியோம்.



## உகந்தை முருகன் கோவில்களில் இன்று கொடியேற்றம்



வீ.ரி. சகாதேவராஜா

இலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க இருபெரும் முருகன் ஆலயங்களான கதிர்காமம் கந்தன் ஆலயம் மற்றும் உகந்தமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல்விழா உற்சவம் இன்று(10) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

நாட்டில் நிலவும் கொவிட் தாக்கம் காரணமாக இருபெரும் ஆலயங்களின் கொடியேற்றம் தொடக்கம் தீர்த்தோற்சவம் வரையிலான காலப்பகுதியில் பக்தர்களின் பங்குபற்றல் இன்றி இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்று 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் ஆடிவேல்விழா உற்சவங்கள் எதிர்வரும் 23ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

கதிர்காம உற்சவ திருவிழாக்காலங்களில் ஆக ஐந்து நடன குழுக்களை மாத்திரம் இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, கிழக்கின் தென்கோடியிலுள்ள வரலாற்று சிறப்புமிக்க உகந்தைமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல்விழா உற்சவம் இன்று 10ஆம் திகதி கொடியேற்றதுடன் ஆரம்பமாகி 25ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருக்கிறது.

நாட்டின் கொவிட் நிலைமை காரணமாக பக்தர்கள் மற்றும் பாதயாத்திரீகர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. நேர்த்திக்கடனும் செலுத்தமுடியாது.

ஆக ஆலய குருக்கள் நிருவாகசபையினர் உபயகாரர்கள் என 30 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கும் அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னரே ஆலயத்துக்குள் அனுமதிக்கப்படுவர்.

பொலிசார் இராணுவத்தினர் உள்ளிட்ட அனைவரையும் விசேட பாதுகாப்பு மற்றும் வீதிச்சோதனை கடமையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, பொதுமக்கள் எக்காரணத்தை கொண்டு மேற்படி ஆலயங்களுக்கு வருகை தருவதை தவிர்க்குமாறும் அவ்வாறு வருகை தருகின்றவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படுவர் எனவும் கூறப்பட்டுள்ளது.



## கொடியேற்றம்

வரலாற்றுப் பிரசித்திப் பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடிஅமாவாசை உற்சவம் எதிர்வரும் 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கின்றது.

அது தொடர்பான பூர்வாங்க பஞ்சாயத்து சபைக்கூட்டம் ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையில் ஆலய முன்றலில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அதேவேளை திருக்கோவில் பிரதேசசெயலாளர் த.கஜேந்திரன் முன்னிலையில் நடைபெறும் அனுசரணைக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றன. அதில் கொவிட் சுகாதார வழிமுறை தீர்மானங்கள் எடுக்கப்படவிருக்கின்றன.

இந்தவருடத்திற்கான ஆடிஅமாவாசை உற்சவம் ஜூலை மாதம் 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 08ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

மறுநாள் பூங்காவனத்திருவிழா தொடர்நது மறுநாள் வயிரவர் பூஜையுடன் நிறைவடையவுள்ளது. ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநதாதக்குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெறவுள்ளது.

அனுசரணைக்கூட்டத்தின் பின்னர் உற்சவத்திற்கான உபயகாரர்கள் முதல் சகல செயற்பாடுகளுக்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டவுள்ளன.

(வி.ரி.சகாதேவராஜா)

வடக்கில் வாள்வெட்டு, வன்முறைகள்:

# 'லீ' பின்னணி

## ஹாவா 'ஆவா'வானதா அல்லது ஆவாயன் 'ஆவா'வானதா?

எம். றொசாந்த



கோண்டாவில், செல்வபுரம் பகுதியில் ஜூன் 30ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற வன்முறை சம்பவத்தில், ஒருவரின் கை துண்டாடப்பட்டதுடன் எட்டுப் பேர் படுகாயமடைந்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார், மூவரைக் கைது செய்திருந்தனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் , 'ஆவா' குழுவில் இருந்து சிலர் பிரிந்து, 'லீ' குழுவை ஆரம்பித்து உள்ளனர் எனவும் அந்தக் குழுவுக்கு உத்வேகம் அளிக்கும் பாடலை உருவாக்கி இணையத்தில் பதிவேற்றியமையால் தான் 'லீ' குழுவை சேர்ந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு , பாடல் உருவாக்கிய கலையகத்தையும் (ஸ்டூடியோ) தீயிட்டு கொளுத்தியதாக வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்கு பண உதவிகள், வெளிநாட்டில் இருந்து குறிப்பாக, சுவிஸ் நாட்டில் இருந்து கிடைக்கப்பெறுவதாக பொலிஸார் கூறியிருந்தனர்.

அதேபோல், ஜூன் 30ஆம் திகதி முல்லைத்தீவு, கள்ளப்பாடு பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்த கும்பல், நடத்திய வாள் வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் வீட்டில் நின்ற காரும் தீக்கிரையாக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸார், யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆறு பேரை ஜூலை ஆறாம் திகதி கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், இவர்களும் 'ஆவா' குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்களுக்கும் சுவிஸ் நாட்டில் இருந்து பணம் கொடுத்து, முல்லைத்தீவில் தாக்குதல் நடத்துமாறு கூறப்பட்டதன் அடிப்படையிலையே, தாக்குதலை இவர்கள் மேற்கொண்டதாகவும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்படுபவர்கள் யார் ?

'ஆவா' குழு என ஒரு குழு இயங்குவதாக, கடந்த ஏழு ஆண்டு காலமாக பொலிஸாரால் கூறப்பட்டு வரும் நிலையில்,ஏழு வருடங்கள் கடந்தும் அந்தக் குழுவை இல்லாதொழிக்க முடியவில்லை. அல்லது, அதன் செயற்பாட்டை முடக்க முடியவில்லை.

ஆரம்ப காலத்தில், 'ஆவா' குழுவைச் சேர்ந்தவர்கள் என அடையாளப்பப்படுத்தப்பட்ட நபர்களில் சிலர், வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்று உள்ளனர். பலருக்கு யாழில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்குகள் நிலுவையில் உள்ளன. பல வழக்குகளில் அவர்கள் நிபந்தனை பிணையில் விடுவிக்கப்பட்டு உள்ளதால், அவர்கள் மீண்டும் வன்முறைகளில் ஈடுபட்டால், பிணை இரத்து செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்படுவார்கள். அதனால், ஆரம்ப காலத்தில் இயங்கியவர் என அடையாளப்படுத்தப்படுபவர்கள் பெரும்பாலும் விலகியே இருக்கின்றார்கள்.

'ஆவா' குழு என ஒரு குழு இயங்குவதாகக் கூறப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், கைது செய்யப்படும் நபர்கள் பெரும்பாலும் 25 வயதுக்கு உட்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

ஒரு கட்டமைக்கப்பட்ட குழுவாகவோ, அமைப்பாகவே இயங்காத 'ஆவா' குழுவின் பெயரில் இந்த ஏழு வருட கால பகுதியில், சுமார் 500க்கும் மேற்பட்ட வாள் வெட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

> **விக்டர் தலைமையிலான குழு 'Lycan' எனவும் தனு தலைமையிலான குழு 'Rox' எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர்**


அதேவேளை, யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை தலைமறைவு வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற சூழல் இல்லை. பெரும் காடுகளோ, பெரும் நிலப்பரப்போ இல்லை. அவ்வாறான நிலையில், இந்தக் குழுவில் இயங்குபவர்கள், வீடுகளை விட்டு வெளியேறி, ஒரு வன்முறை கும்பலாக தம்மை மாற்றிக்கொண்டவர்களும் இல்லை.

பெரும்பாலானவர்கள் யாழில் உள்ள பிரபல பாடசாலைகளில் உயர்தரம் வரை கற்ற மாணவர்களே ஆவார். அவர்கள் ஏன் வன்முறைக் கும்பலாக மாற்றப்படுகிறார்கள்? அல்லது மாறுகின்றார்கள் ? எவ்வித அரசியல், பணபலம் போன்ற பின்புலங்களைக் கொண்டிராத இந்தக் குழுவொன்றின் செயற்பாடுகளை கடந்த ஏழு ஆண்டுகளாக முடிவுக்கு கொண்டு வர முடியாமல் பொலிஸார் ஏன் திணறிக்கொண்டு இருக்கின்றார்கள் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது.

பொலிஸார் வாள்வெட்டு, வன்முறைகள் தொடர்பிலான சம்பவங்களை விசாரணை செய்து, சந்தேக நபர்களைக் கைது செய்கின்ற போதிலும், வாள் வெட்டு சம்பவங்கள் தொடரவே செய்கின்றன.

யார் இந்த ஆவா ?

யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வீடொன்று உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்திருந்தனர். அதன் அடிப்படையில் 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆறாம் திகதி ஒன்பது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து புதிய கைக்குண்டுகள் இரண்டு உட்பட வாள்கள் 12, கைகிளிப் (நக்கில்ஸ்) இரண்டு, கேபிள்கள், இரும்புக் கம்பிகள் என்பன மீட்கப்பட்டன.



குறித்த வீடுடைப்பு சம்பவத்துடன் தொடர்புடைய குழுவுக்கு, வினோதன் என்பவர் தலைமை தாங்கியவர் எனவும், அக் குழுவில் உள்ளவர்கள் 17 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். அவ்வேளையிலையே முதல் முதலாக, அப்போதைய கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஸ்ரீநிக சஞ்ஜீவ ஜெயக்கொடி, 'ஆவா' எனும் பெயரை உச்சரித்திருந்தார்.

"ஆவா குழு என ஏன் அழைக்கப்படுகிறது" என பொலிஸ் தரப்பிடம் அப்போது ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய வேளை , 'ஹாவா' எனும் சிங்கள சொல்லுக்குத் தமிழில் முயல் என அர்த்தம். அதாவது, முயல் மாதிரி வேகமாக ஓட கூடியவன் தான் அக்குழுவின் தலைவனான வினோதன். அதனால் அவனை 'ஹாவா' (முயல்) என அழைத்திருக்கலாம் எனவும் 'ஹாவா' தான் பின்னர் மருவி, 'ஆவா' ஆனது எனவும் கூறப்பட்டது.

அதேவேளை , அக்குழுவின் தலைவன் என பொலிஸாரால் கூறப்பட்ட வினோதன் என்பவனின் வாய், படிமானமாக மூட முடியாதவாறான உதடுகள் அமைப்பை உடையவன் எனவும் அவனது வாய் 'ஆ' என்று இருக்கும் எனவும் அதனால் அவனை, 'ஆ வாயன்' என அழைப்பார்கள் எனவும் அதுவே மருவி 'ஆவா' என வந்ததாகவும் அப்போது கூறப்பட்டது. ஆனால், இந்தப் பெயர் எவ்வாறு வந்தது என்பது, பொலிஸாருக்கே வெளிச்சம்.

2018ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதியில் யாழில் இருந்து சில இளைஞர்களை கொழும்பில் உள்ள பிரபல சிங்கள ஊடக நிறுவனம் ஒன்றுக்கு அழைத்து சென்ற நபர் ஒருவர், 'ஆவா' குழு தொடர்பிலான சர்ச்சைக்குரிய பேட்டியை அளித்தார். அத்தோடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை பற்றியும் அவதூறாக பேசி இருந்தார். 'ஆவா' குழுவின் ஒருங்கிணைப்பாளர் எனத் தன்னை அறிமுகப்படுத்தி கொண்ட குறித்த நபர், 2015ஆம் ஆண்டு முன்னிலை சோஷலிச கட்சியில் தேர்தலில் போட்டியிட்டிருந்தார். அத்தேர்தலில் தோல்வியடைந்த நிலையில், 2017ஆம் ஆண்டில் போதை பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாண சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த கால பகுதியில், வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி கொண்டார்.

அதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், சிறையில் ஏற்பட்ட தொடர்பைப் பேணி, தன்னை 'ஆவா' குழு ஒருங்கிணைப்பாளர் என அறிமுகம் செய்து கொண்டார்.

'ஆவா' குழு ஒரு கட்டமைக்கப்பட்ட அமைப்பாக இயங்காததால் அல்லது, அதற்கு உரிமை கோர எவரும் இல்லாத காரணத்தால், இவர் தன்னை ஒருங்கிணைப்பாளர் என அறிமுகம் செய்து கொண்டார். சிங்கள ஊடகங்கள் அவற்றை நம்பி, அவருக்கு முன்னுரிமை கொடுத்தன. அப்போதைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரான ராஜித சேனாரட்ன உள்ளிட்டவர்கள் 'ஆவா' குழுவின் ஒருங்கிணைப்பாளர் என அவருடன் பேச்சுகளையும் நடத்தி இருந்தனர்.

யாழில், வன்முறைகளில் ஈடுபடும் கும்பல் ஒன்றின் ஒருங்கிணைப்பாளர் தான் தான் என அறிமுகப்படுத்திய நபரை, நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் சந்தித்துப் பேசியது, அப்போது யாழ். மக்களிடம் கேலிக்குரிய விடயமாகப் பார்க்கப்பட்டது

'ஆவா' குழுவின் தலைவன் என பொலிஸாரால் கூறப்பட்ட வினோதனுக்கு நீதிமன்றங்களில் தற்போதும் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், அவர் திருமணம் முடித்து வாழ்கின்றனர்.

அக்குழுவின் முக்கியஸ்தர்கள் எனக் கூறப்பட்ட 'சன்னா' என்று அழைக்கப்படும் பிரசன்னா, தேவா, பிரகாஸ் ஆகியோரில் 'சன்னா' தற்போது வெளிநாட்டில் வசிக்கின்றார். தேவா, பிரகாஸ் ஆகிய இருவரும் இந்தியாவுக்கு தப்பி சென்று இருந்த நிலையில், திருச்சி பொலிசாரால் உரிய ஆவணங்கள் இல்லாது நடமாடிய குற்றச்சாட்டில் 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி கைது செய்யப்பட்டனர்.

அதன் பின்னர், யாழில் இருந்தவர்களில் 'ஆவா' குழு இரண்டாகப் பிளவுபட்டது. நிஷா விக்டர் தலைமையில் ஒரு குழுவும் தனு தலைமையில் இன்னொரு குழுவும் இயங்கியது. நிஷா விக்டர் தலைமையிலான குழு 'Lycan' எனவும் தனு தலைமையிலான குழு 'Rox' எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர்.

அவர்கள், தமக்குள் மாறி மாறி வன்முறைகளில் ஈடுபட்டனர். முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் இரு குழுக்களும் தமக்குள்ளும் மோதிக்கொள்ளும்; பின்னர் வன்முறைகளில் ஈடுபடுவார்கள்.

இத்தகைய குழுக்களினால் இன்றுவரை வன்முறை, வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடருகின்றன.

அம்பலமாகிய

# அக்கினிக் குஞ்சு



ப.பிறின்சியா டிக்சி
p.p.dixci@gmail.com



### "சிறுமியைப் பாலியல் செயற்பாடுகளுக்கு விற்பனை செய்த நபர் கைது"

கடந்த ஜூன் மாத நடுப்பகுதியில் நாட்டின் அனேக அனேக ஊடகங்களில் அவ்வப்போது பேசப்பட்ட செய்தியொன்று நாளடைவில் தலைப்புச் செய்தியாகும் அளவுக்குப் பிரபல்யமானது.

இவ்வாரத்தின் ஆரம்பத்தில், இலங்கையின் அயல்நாடுகளான மாலைதீவு மற்றும் இந்திய நாட்டு ஊடகங்களும் இச்செய்திக்கு முன்னுரிமை அளித்திருந்தமையைக் காண முடிந்தது.

அது மாத்திரமல்லாமல், இவ்விடயம் தற்போதும் சமூகவலைத்தளங்களுக்குத் தீனி போட்டு வருகின்றது. சரி, சம்பவத்துக்கு வருவோம்;

15 வயதுச் சிறுமியைப் பாலியல் நடவடிக்கைளுக்காக, இணையத்தளம் ஊடாக விற்பனை செய்த குற்றச்சாட்டில், 35 வயதான நபரொருவர், கடந்த ஜூன் மாதம் 9ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டார்.

அந்தச் சந்தேகநபர், கல்கிசையில் வாடகை வீடொன்றில் சிறுமியை தடுத்துவைத்து, இணையத்தளத்தில் சிறுமியின் நிழற்படத்தை பதிவேற்றி, பாலியல் செயற்பாடுகளுக்காக விற்பனை செய்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட தொடர் விசாரணைகளிலே பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின. தெல்கொடவைச் சேர்ந்த தாயிடமிருந்தே, அந்தச் சந்தேகநபர், சிறுமியை வாங்கியுள்ளார் எனத் தெரியவந்தது.

அது மாத்திரமல்லாமல், இதனுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் பெரும் புள்ளிகள் பலர் கைதுசெய்யப்பட்டனர். தொடர்ந்தும் சுமார் 300 பேருக்கு, பொலிஸார் வலைவிரித்துள்ளனர்.


முதலாவதாகக் கைதாகிய பிரதான சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்து, அச்சிறுமியின் தாய், சிறுமியை முதன்முதலில் விற்பனை செய்தவருடன் தகாத முறையில் உறவைப் பேணிய பெண், ஓட்டோ சாரதி, கார் சாரதி, மோட்டார் சைக்கிள் ஓட்டுநர், சிறுமி தொடர்பான தகவல்களை இணையத்தளத்தில் பதிவேற்றிய மற்றும் விளம்பரம் செய்தவர் என 17 பேர் அடுத்தடுத்துக் கைதுசெய்யப்பட்டனர்.

இதனையடுத்தே, இச்செய்தி காட்டுத்தீயாய் கொழுந்துவிட்டு எரிந்தது.

இச்சிறுமியை பாலியல் நடவடிக்கைகளுக்காக விற்பனை செய்தமை தொடர்பில், இதுவரையிலும் 35 பேர், பொலிஸார், சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பல நீதவான் நீதிமன்றங்களின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் முதலில் சிக்கிய பெரும் புள்ளி, மிஹிந்தலை பிரதேச சபையின் உப தவிசாளர் லலித் எதிரிசிங்க ஆவார். இவர், ஜூன் 30ஆம் திகதியன்று கைதுசெய்யப்பட்டார். இவருடன் மேலும் இருவர் அன்றையதினம் கைதுசெய்யப்பட்டனர்.



தொடர்ந்து கப்பலின் கெப்டன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அத்துடன், மாணிக்கக்கல் வர்த்தகர் மற்றும் சில சிப்பாய்களும் கைதாகினர்.

அதனையடுத்து, சிறுமியைக் கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் இம்மாதம் 04ஆம் திகதியன்று, 45 வயதுடைய மாலைதீவு பிரஜை ஒருவரைக் கைதுசெய்திருப்பதாக, பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்திருந்தார்.

எனினும், அதற்கு மறுநாள்தான் இவ்வாறு கைது செய்யப்பட்ட மாலைதீவு பிரஜை, முன்னாள் மாநில நிதி அமைச்சரும், டிராகுவின் முன்னாள் தலைவருமான முகமது அஷ்மாலி என்பவராவார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இதனை மிஹாரு செய்தி சேவை, இலங்கை பொலிஸாரை மேற்கோள்காட்டி வெளியிட்டது.

இந்நிலையில், இந்திய ஊடகங்களும் "மாலைதீவின் முன்னாள் நிதியமைச்சர் பாலியல் குற்றச்சாட்டில் இலங்கையில் கைது" என முழங்கின.

அத்துடன், அச்சிறுமியைக் கொள்வனவு செய்த 33 வயதான நபர் மற்றும் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதற்காக அறையொன்றை வழங்கியிருந்த ஹோட்டல் ஒன்றின் முகாமையாளரும் கைதுசெய்யப்பட்டனர்.

மேலும், சிறுமியை பாலியல் நடவடிக்கைக்கு கொள்வனவு செய்த இலங்கையின் முக்கிய இருதய சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவர், அதாவது, வெலிசர கடற்படை முகாமின் இருதய சத்திரசிகிச்சை நிபுணரான லெப்டினன் கொமாண்டரும் இம்மாதம் 06ஆம் திகதி சிக்கினார். இவ்வாறே, பெரும் புள்ளிகளைக் கொண்டு, இப்பட்டியல் நீண்டு சென்றது.

இவர்களில் பாலியல் நடவடிக்கைகளுக்காக இச்சிறுமியை விற்பனை செய்த சிறுமியின் தாய் கைது செய்யப்பட்டு, முன்னதாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

எனினும், கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் அத்தாய் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவரை, ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் மேலதிக நீதவான் லோஹினி அபேவிக்ரம விடுவித்தார்.

இந்நிலையில், இந்தச் சிறுமியின் தாய், மூன்று மாதக் கர்ப்பிணி என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை, கடற்படை மருத்துவர், பிரதேச சபையின் துணை தவிசாளர் மற்றும் இரத்தின வியாபாரிகள் இருவர், நேற்று (09) பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறுமி, தனது சம்மதத்துடன் பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பினும், இவர் 15 வயதுடைய சிறுமியாக இருப்பதால், சிறுவர் வன்புணர்வுடன் தொடர்புடைய குற்றமாகவே இது இருப்பதாகவும் இதனுடன் தொட்புடையவர்கள் நிச்சம் சட்டத்தின் முன் தண்டிக்கப்படுவார்கள் எனவும் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புப் பணியகத்தின் பொறுப்பதிகாரி மனோஜ் சமரசேகர தெரிவித்தார்.

தவிர, இச்சிறுமி 18 வயதுக்கு மேற்பட்டவராக இருந்திருந்தால் பாலியல் தொழிலில் ஈடுபட்டார் என பெரும் புள்ளிகள் அனைவரும் எளிதாக நழுவியிருப்பர். எனினும், தற்போது சிக்கித் தவிக்கின்றனர்.

அதிலும் கைதாகிய ஒரு பெரும் புள்ளியின் சட்டத்தரணி, தனது தரப்பைச் சேர்ந்தவர், "அறையில் சிறுமியுடன் அவர் இருந்த போதிலும், அங்கு அவர் தவறு எதுவும் செய்யவில்லை. காரணம், ஆண்மைக் குறைபாடுகளுக்கான சிசிச்சையை அவர் பெற்று வருகின்றார்" என வாதாடி, அதற்கான வைத்திய சான்றுகளையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

அதேவேளை, கடற்படையின் விசேட வைத்திய நிபுணர் பணி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் எனவும் இந்தச் சம்பவம் தொடர்பில் கடற்படையினரால் உள்ளக விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.

அத்துடன், மிஹிந்தலை பிரதேச சபையின் உப தவிசாளர் லலித் எதிரிசிங்கவின் கட்சி உறுப்புரிமையை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன இரத்துச் செய்துள்ளதாக அதன் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் அறிவித்துள்ளார். அத்துடன், குறித்த நபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

மேலும், பெண்கள் மற்றும் சிறுவர்களை இணையத்தின் ஊடாக பாலியல் நடவடிக்கைகளுக்கு விற்பனை செய்யும் இணையத்தளங்களின் உரிமையாளர்களைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த 15 வயதுச் சிறுமி இணையத்தில் பாலியல் நடவடிக்கைக்கு விற்பனை செய்தமை தெரியவந்ததைத் தொடர்ந்து, இதுபோன்ற வலைத்தளங்களைத் தேடுமாறு, நீதிமன்ற உத்தரவை, தமது பணியகம் பெற்றுள்ளதாகவும் அப்பணியகம் தெரிவித்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் துறையின் டிஜிட்டல் பிரிவின் உதவியுடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அப்பணியகத்தின் பொறுப்பதிகாரி மனோஜ் சமரசேகர தெரிவித்துள்ளார்.

இச்சிறுமி குறித்த விளம்பரம் இணையத்தளத்தில் உலாவியதைப் பார்த்திருந்த ஒருவரே, பொலிஸாருக்கு இது குறித்து தகவல் வழங்கியுள்ளார். அதனையடுத்தே, இவ்விடயம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

தமது அமைச்சின் "1938" அவசர அழைப்புக்கு 2020 ஜனவரி தொடக்கம் 2021 மே மாதம் வரை, 13 சிறுவர் துஷ்பிரயோகங்களும் 404 இணையவழிக் குற்றச்செயல்களும் முறையிடப்பட்டுள்ளதாக, மகளிர், சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. எனினும், இவ்வாறான முறைப்பாடுகள் சொற்ப அளவிலேயே கிடைக்கப்பெறுவதாகவும் குறித்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இன்னும் அம்பலத்துக்கு வராமல் எத்தனை எத்தனை மொட்டுகள் கசக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றனவே தெரியவில்லை. எனினும், அவர்களும் இவ்வாறான கொடுமைகள் அல்லது அடிமைத்தனங்களில் இருந்து அவசியம் விடுபட வேண்டும்.

தம் எழுத்துகள் மூலமாக மக்கள் மனதில் பெண்களின் விடுதலை உணர்வை ஊட்டிய சமூகச் சீர்திருத்தவாதி மகாகவி பாரதியார் இவ்வாறு பாடியுள்ளார்.

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் – அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு; தழல்
வீரத்தில் குஞ்சென்னும் மூப்பென்றும்
உண்டோ?

அவர் தம் மனம் எனும் பொந்தில் விடுதலை எனும் தீப்பொறியை ஏற்றி வைத்தேன். அதன் தாக்கத்தால் அனைவரது மனங்களிலும் படர்ந்திருந்த அடிமைத்தனம் எனும் காடு அழிந்தது என்றார்.

அடிமைத்தனக் கொடுமையில் ஆட்பட்டு அதிலிருந்து மீள முயல்வோர்க்கு சிறு பொறியளவிலான விடுதலை வேட்கையே போதுமானது. அச்சிறு பொறி பல்கிப்பெருகி, அதன் தாக்கத்தால் அடிமைத்தனம் நீங்கும்.

அவ்வாறே, இன்று வெளியுலகிற்கு வந்துள்ள இச்சிறுமியின் விடுதலை வேட்கை, இவர் போன்று பாதிக்கப்பட்டுக்கொண்டு இருப்பவர்களுக்கும் விடுதலை உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே சமூக ஆர்வளர்களின் எதிர்பார்ப்பாகும்.

சிறுவர்களின் பாதுபாப்புக் குறித்து விழிப்புடன் இருப்போம், பொறுப்புடன் நடந்துகொள்வோம்.



நமது பிள்ளைக்கு

# யாரோ பெயர் வைப்பதா?

## களுதாவளை விவசாயிகள் ஆதங்கம்



வ. சக்தி
shagthivel@gmail.com

“நாங்கள் வழக்கமாக அந்தர் பசளை 1,500 ரூபாய்க்குத்தான் கொள்வனவு செய்தோம். ஆனால், இப்போது ஓர் அந்தர் பசளையை 4,000 ரூபாய்க்கு வாங்குகின்றோம். தற்போதைக்கு இந்த விலை கொடுத்து வாங்குவதற்கும் பசளை இல்லாமலுள்ளது. 900 ரூபாவுடைய கிருமிநாசினி ஒரு போத்தலின் விலை, தற்போது 2,000 ரூபாயாகவுள்ளது. எவ்வாறு நாங்கள் தொழில் செய்வது, தற்போது எமது மிளகாய்ச் செய்கையெல்லாம் பூச்சித்தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலாக ஒருவித வாடல் நோயும் தாக்குகின்றது. இவற்றுக்கு உரிய நாசினிகளைக் கொள்வனவு செய்வதற்குச் சென்றால் அவர்கள் தரும் நாசினிகளைத் தெழித்தால் அதுவும் சரிவரவில்லை. எவ்வளவோ காசைக் கொட்டி இறைத்துத்தான், இந்தக் கடற்கரை மணலில் போராடி தினமும் மிளகாய் பயிர் செய்கையை மேற்கொண்டு வருகின்றோம்” எனத் தெரிவிக்கின்றார் களுதாவளையில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக மிளகாய் செய்கையில் ஈடுபட்டுவரும் க. யோகநாதன்.

**செலவோ 65 ரூபாய்க்கு மேல்; வரவோ 30 ரூபாய்; எமது நிலைமை என்னாவது?**

விவசாயி யோகநாதனின் உட்கிடைக்கை இவ்வாறு இருக்க, “எமது மிளகாய் செய்கை காய்த்துப் பூத்திருக்கும் பருவத்திலே ஒருவித வாடல் நோய்த்தாக்கம் ஏற்பட்டு அனைத்தும் பழுதடைந்து போகின்றன. எமது செய்கையைத் துறைசார்ந்த அதிகாரிகள் நேரில் வந்து பார்வையிட்டு இவ்வாறான நோய்களுக்குரிய மருந்துகளைச் சிபார்சு செய்து தரவேண்டும்.

இது ஒரு புறமிருக்க, நாம் பலத்த சிரமத்தின் மத்தியில் எமது பரம்பரை விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற இந்நேரத்தில், எமது விளைபொருட்களுக்கு இதுவரையில் நியாய நிலை கிடைக்காமையால் நாம் மிகுந்த நட்டத்தையே எதிர்கொண்டு வருகின்றோம். எமது விளை பொருட்கள் கல்முனை, அக்கரைப்பற்று. சம்மாந்துறை, ஆரையம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி, உள்ளிட்ட பல பொதுச் சந்தைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆனால் எமது மிளகாய் ஒரு கிலோ கிராமுக்கு வழங்கப்படும் பணத்தைப் பார்த்தால் வாய், வயிறு எல்லாம் பற்றி எரிகின்றது. ஒரு கிலோ கிராம் மிளகாயின் மொத்தவிலை வியாளக்கிழமை (08) 20 ரூபாய்; புதன்கிழமை 30 ரூபாய், 6ஆம் திகதி 40 ரூபாய்; 3ஆம் திகதி 40 ரூபாய் என விற்பனையாகியது.

இந்நிலையில் இந்த விலைக்கு மேலதிகமாக ஒரு கிலோ கிராம் மிளகாய்க்கு 60 ரூபாய் காசை நாங்கள் விவசாயிகளுக்காக வைத்துத் தருகின்றோம் என மொத்த வியாபாரிகள் பெற்றுக் கொண்டு செல்கின்றார்கள்.

ஒரு கிலோ கிராம் மிளகாய் பறிப்பதற்கு 20 ரூபாய் கொடுக்க வேண்டும். மிளகாய் பறிப்பவர்களுக்குரிய காலை, பகல் உணவு, எண்ணை, பசளை, மின்சாரக் கட்டணம் எனக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு கிலோ கிராமுக்கான உற்பத்தி செலவு குறைந்து 65 ரூபாவுக்கு மேல் செலவாகின்றது. இவ்வாறு செலவு செய்து 20 இற்கும் 30 ரூபாவுக்கும் விற்றால், எமது நிலைமை என்னாவது? விவசாயிகளாகிய எங்களது நிலைமை இவ்வாறுதான் செல்ல வேண்டுமா, எமது பயிர்களைப்போல் அழிய வேண்டுமா”? எனத் தனது உட்கிடக்கைகளை எடுத்தியம்புகின்றார் மற்றுமொரு விவசாயியான க. திருநாவுக்கரசு.

**அதிகாரிகள் பார்வையிட்டு நோய்க்கான மருந்துகளை சிபார்சு செய்ய வேண்டும்**

“இதுவரைகாலமும் இரசாயன உரவகைகளையும், இரசாயன கிருமி நாசினிகளையும் பயன்படுத்தியே நாம் மிளகாய் செய்கையில் ஈடுபட்டு வந்தோம். தற்போது அது நிறுத்தப்பட்டுள்ளது. சில பசளைக் எண்ணை கடைகளில் கூட்டுப்பசளை உள்ளது. அதனையும் வாங்கிக் கொண்டு மிளகாய்களுக்கு இட்டால் செழிப்பாக வருவதை அவதானிக்க முடியவில்லை. எமது இந்த மணற்பாங்கான நிலத்துக்கு இரசாயனப் பசளை வகைகள் இல்லாவிட்டால் பயிர் செய்ய முடியாது. இது தற்போது விளங்குவித்லை; எதிர்வரும் வருடங்களில்தான் ஏனையோருக்கும் புரியும். நாட்டுக்கு சரியான வறுமை வரப்போகின்றது. நாம் பயிர் செய்வது கடற்கரை பகுதியில்; எவ்வாறு நாம் தொடர்ந்த பயிர் செய்யப்போகின்றோம் என்பது எமக்குப் புரியாமலுள்ளது” என்கிறார் இன்னுமொரு விவசாயியான ச. பாக்கியராசா.

“இதுவரைகாலமும் சிறுபோகம், பெரும்போகம் என மாறி மாறி வேளாண்மைச் செய்து வரும் எமது ஏனைய சக விவசாயிகளுக்கு காலத்துக்குக் காலம் அரசாங்கம் இலவசமாக பசளைகளை விநியோகித்து வருகின்றது. மாறாக நாங்கள் மேட்டு நிலத்தில் மிளகாய், கத்தரி, வெண்டி, வெங்காயம், பயற்றை, உள்ளிட்ட பல பயிர்களைச் செய்து வருகின்றோம். ஆனால் எமக்கு அரசாங்கம் இதுவரையில் இலவச உரத்தை தரவில்லை. நான் இந்த தடவை மிளகாய் பறித்துவிட்டு கூட்டுப்பசளையைத்தான் எறிந்துள்ளேன். எமது இந்த மண்ணுக்கு கூட்டுப்பசளை சரிவருமா இல்லையா என்பது எமக்கு விளங்காமலுள்ளது. எமக்கு இது தொடர்பில் விவசாயப் போதனாசிரியர்கள் விளக்கங்களைத் தரவேண்டும்” எனத் தெரிவிக்கின்றார் த. சிவலிங்கம்.

இவை மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட களுதாவளைப் பகுதியில் மேட்டுநில மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகளின் எண்ணக் குமுறல்களாகும்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் களுவாஞ்சிகுடி, எருவில், மகிழூர், களுதாவளை, தேத்தாத்தீவு, மாங்காடு, செட்டிபாளைம், குருக்கள்மடம் உள்ளிட்ட பல கரையோரப்பகுதிகளில் மிளகாய், கத்தரி, வெண்டி, பீர்க்கு, புடோல், பாகல், பயற்றை, வெங்காயம், உள்ளிட்ட இன்னோரன்ன மரக்கறி வகைகளை உற்பத்தி செய்து வருகின்றனர். ஆனாலும் தாம் உற்பத்தி செய்யும் மரக்கறி வகைகளுக்கு நிர்ணய விலை இன்மையால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டு வருவதாகத் கவலை தெரிவிக்கின்றனர்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் சுமார் 2000 இற்கு மேற்பட்ட விவசாயிகள் மிளகாய் செய்கையை மாத்திரம் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு விவசாயம் செய்து தமது குடும்பத்தை பாதுகாத்து, பிள்ளைகளையும் கற்பித்து வரும் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய நிர்ணய விலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் கடைமையாகும்.

விவசாயிகள் மேற்கொள்ளும் மேட்டுநிலப் பயிர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் நோய் தாக்கங்கள் தொடர்பிலும், அவற்றுக்கு சிபார்சு செய்யப்பட்ட நாசினிகள் தொடர்பிலும் துறைசார்ந்த அதிகாரிகள் அவ்வப்போது உரிய விளக்கங்களை வழங்க வேண்டும்.

தாம் உற்பத்தி செய்யும் மிளகாய் உள்ளிட்ட மரக்கறி வகைகளுக்கு இதுவரை காலத்துக்கும் வேறு யாரோதான் மொத்த விலையைத் தீர்மானிக்கின்றனர். அதனை நிறுத்தி தாம் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு தாங்களே மொத்த விலையைத் தீர்மானிக்க வேண்டும். எமது உற்பத்திகளுக்கு வேறு யாரோ விலையைத் தீர்மானித்துவிட்டு அவர்கள் விரும்பும் காசை எமக்கும் தருவது நாம் பெற்ற பிள்ளைக்கு வேறுயாரே பெயர் வைப்பது போன்றுள்ளது.

மேட்டுநில விவசாயிகளுக்கும், இலவச உர வகைகளை அரசாங்கம் வழங்க முன்வரவேண்டும்.

விவசாயப் பகுதிகளிலுள்ள வீதீகளைச் செப்பனிட வேண்டும்.

தடையின்றி தமது நிலத்திற்கு ஏற்ற இரசாயன உரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வகை செய்ய வேண்டும். உள்ளிட்ட பல கோரிக்கைகளையும் அப்பகுதி விவசாயிகள் முன்வைக்கின்றனர்.

அத்தோடு உயிர் வேலி அமைத்தல், ஊடு பயிரிடுதல், முறைமையையும் நாம் நடைமுறைப் படுத்தியிருக்கின்றோம். கடந்த வருடம் நவீன விவசாய மயமாக்கல் திட்டத்துடன் இணைந்து விவசாயத் திணைக்களம், 100 விவசாயிகளுக்கு தூவல் நீர்ப்பாசனத்தை அறிமுகப் படுத்தியிருக்கின்றது. இந்த தூவல் நீர்ப்பாசனத்தால் தாவரங்களுக்கிடையில் ஈரலிப்பான தன்மை ஒன்று உருவாகுவதனால், இவ்வாறான நோய்த்தாக்கங்கள் கடந்த வருடங்களை ஒப்பீடும்போது இவ்வருடம் குறைவாகத்தான் காணப்படுகின்றது. குறிப்பாக களுதாவளையில் மாத்திரம் 450 இற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் 900 மேற்பட்ட விவசாயிகள் மிளகாய் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதி விவசாயிகளுக்கு பிரதேச செயலாளருடன் இணைந்து சேதனைப் பசளை உற்பத்தி செய்யும் முறைமையையும் அண்மையில் ஆரம்பித்திருக்கின்றோம். காலப்போக்கில் அனைத்து விவசாயிகளுக்கும் இதனை அமுல்படுத்தவுள்ளோம் என களுதாவளைப் பகுதி விவசாயப் போதனாசிரியர் பொன்னத்துரை சிறிபவன் தெரிவிக்கின்றார்.

களுதாவளைப் பகுதி விவசாயப் போதனாசிரியரின் கருத்துக்கள் அப்பகுதி விவசாயிகளுக்கு ஓரளவுக்கேனும் ஆறுதல் அளிப்பதாக அமைந்திருந்தாலும் அப்பகுதி விவசாயிகள் மேற்படி எதிர்பார்க்கும் விடையங்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதுவே அப்பகுதி விவசாயிகளின் எதிர்பார்ப்பாகவுள்ளது.





37 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும்

# இராணுவ சேவை வனிதையர்கள்

ஓர் ஆண் என்ற வகையில் நமது வாழ்வை எட்டுக் கட்டங்களாக பிரித்து பார்க்கலாம் அந்த எட்டு கட்டங்களில் நாம் எடுத்து வைக்கும் எட்டுக்கள் அனைத்தும் சாத்தியமாகும் போது வெற்றி இலக்குகளை அடைந்திருப்போம் அந்த எட்டு எட்டுக்களிலும் சாதிக்க நம்மோடு ஒரு சக்தி துணை நிற்கிறது என நம்புகிறோம்.

இதே எட்டுக் கட்டங்களை பெண்கள் கடக்கையில் தாய், சகோதரி, மனைவி, குழந்தை என்று பல பரிணாமங்களை கொள்கிறாள். அந்த வகையில் மேற்கூறிய அத்தனை எட்டுக்களையும் சாத்தியமாக்கிக் கொள்வதற்கு ஆணுக்கு ஒரு சக்தி அவசியப்படுகிறது. அந்த சக்தியாகவும் துணையாகவும் ஒரு பெண் இருப்பாள்.

பெண்கள் தற்கால சூழலுக்குள் ஒடுக்கப்பட்டு கிடப்பத்தற்கு ஆணாதிக்கம், உடல் வலிமை, பாலியல் பல காரணங்கள் இருந்தாலும் அத்தனை தடைகளையும் தகர்த்தெறிந்துவிட்டு சமூகத்தின் முன்னோடியாக திகழ்வதற்கான வலிமையும் உண்டு என்பதற்கு முன்னுதாரணமாக பல பெண்கள் உள்ளனர்.

இவ்வாறாக சமூகத்திற்குள் காணப்படும் தடைக்கற்களுக்கு மத்தியில் முட்டி மோதிக்கொண்டு வலிமையும் ஆளுமையும் கொண்ட பெண்களை ஒன்று திரட்டி அவர்களை ஒரு குடையின் கீழ் நிறுத்தி இந்நாட்டின் மேம்பாட்டிற்கு சக சக்தியாக திகழும் அமைப்புதான் இலங்கை இராணுவ சேவை வனிதையர் அமைப்பு.

இந்த அமைப்பானது இராணுவ வரையரைக்குள் மாத்திரம் மட்டுப்பட்டு கிடக்காமல் அதற்கும் அப்பாலான பல சமூக பணிகளை ஆற்றி வருகிறது.

மங்கையரின் ஆளுமைகளை நெறிப்படுத்தி அவர்களை சேவை வனிதையர்களாக மாற்றியமைத்த சேவை வனிதையர் அமைப்பு இவ்வருடம் ஜூலை மாதம் 12 ஆம் திகதி தனது 37 வது அகவைக்குள் தடம்பதிக்கிறது.

இத்தனை ஆண்டுகளாக இருந்த அமைப்பு சமூகத்துக்குள் ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்காதவையாக இருந்த போதிலும் அவற்றில் சிலவற்றை இங்கு கூறலாம் நாட்டில் இடம்பெற்ற 3 தசாப்த கால யுத்தத்தில் போரிட்ட இராணுவ வீரர்களின் உந்து சக்தியாக துணை நின்ற இவர்கள் இராணுவ வீரர்கள் பலர் யுத்தில் தங்கள் கால் கைகளை இழந்துவிட்டு வந்த போதும் கணவர்களுக்கு தங்களுடைய அன்பான அரவணைப்பாள் புதிய உலகத்தில் வாழ வழிகாட்டினர்.

அதேபோல் போரில் உயிர் நீத்த வீரர்களின் மனைவியர்கள் நாட்டிக்காக தங்களது துணையை தியாகம் செய்த அக மகிழ்ச்சிக்குள் தங்களது சோகங்களை மறைத்துக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். மறு திசையில் போரில் உயிர் நீத்த மற்றும் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் பிள்ளைகளை பராமரிக்கும் பணிகளையும் தாங்களே முன்நின்று செய்கிறார்கள் இத்தகைய வனிதையர்களுக்கு அவசியான சேவைகளை வழங்கும் அமைப்பாகவே இராணுவ சேவை வனிதையம் அமைப்பு இருந்து வருகிறது.











# காலம் கனிந்து வருகின்றது; கவனமாய் கையாள்வது கரங்களிலே உள்ளது

கூட்டுக்குள் நீண்டநாள்களாக அடைப்பட்டு கிடக்கும் பறவையொன்று திறந்துவிடப்பட்டால், அப்பறவை விசுக்கென பறந்து, கண்ணுக்கெட்டாத தூரத்துக்குச் சென்றுவிடும். 'சுதந்திரம்' கிடைத்ததால் மட்டற்ற மகிழ்ச்சியைக் கொண்டிருக்கும் அப்பறவை, சிறக்குகளை மிகவேகமாக அடித்துக்கொண்டு அங்குமிங்கும் பறந்துதிரியும். அவ்வாறானதொரு காலம் கனியவேண்டுமாயின், அதுவும் நமது கைகளிலேயே இருக்கின்றது என்பதை முதலில் நினைவூட்ட விரும்புகின்றோம்.

முகக்கவசம் கீழே விழுந்துவிடாத வகையில் அதனை தாங்கிக்கொண்டிருக்கும் காதுகள் இரண்டும், முடக்கம், கட்டுப்பாடு, தடை, தளர்வு, தடைநீக்கம், தனிமைப்படுத்தல், இச்சொற்களை கேட்டுக்கேட்டு, உணர்விழந்து போயிருக்கும். ஆனால், மூன்று மாதங்களுக்குப் பின்னர், ஒவ்வொன்றாக தளர்த்தப்படுகிறது; நீக்கப்பட்டும் உள்ளது.

ஆனால், கண்ணுக்குத் தெரியாமல் நம்மையெல்லாம் கடந்த மூன்றாண்டுகளாக ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கும் கொரோனாவும் அதன் பிறழ்வுகளும் முற்றுமுழுதாக அழித்தொழிக்கப்படவில்லை என்பதையும், மற்றுமொரு பிறழ்வு ஏற்படக்கூடும் என்பதையும் நினைவில் கொண்டு, வாழ்க்கையை கொண்டுநடத்துவதே உசிதமானது.

மதவழிபாட்டிடங்கள் திறக்கப்படாது, மசாஜ் நிலையங்கள் திறக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. எனினும், சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி, மதவழிப்பாட்டிடங்களை திறப்பதற்கும், திருமண வைபவங்களில் பங்கேற்பதற்கு அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் தொடர்ந்தும் நீடிக்கவேண்டுமாயின் அது மக்களின் கைகளிலேயே உள்ளது.

பரீட்சைகளுக்கான திகதிகள் குறிக்கப்பட்டுவிட்டன, ஆசிரியர்களுக்கு தடுப்பூசிகளை செலுத்தும் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டையும் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் முழுமையாகத் திறப்பதாக, ஜனாதிபதியும் அறிவித்துள்ளார். இவையெல்லாம் அச்சொட்டாக அமலாகவேண்டுமாயின் அதுவும் ஒவ்வொரு பொதுமகனின் கைகளிலேயே உள்ளது.

நாடு முழுமையாகத் திறக்கப்பட்டால் இருவருக்கிடையே, ஒரு மீற்றர் தூர இடைவெளியைப் பேணுவது கடினமாகும். ஆனாலும், கைகளைக் கழுவி, முகக்கவசங்கள் அணிந்து, ஏனைய சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றலாம். அவ்வாறு செய்தாலே அதுவே ஓரளவுக்குப் போதுமானதாகும். அத்துடன் தடுப்பூசிகளை ஏற்றுவதை துரிதப்படுத்துவதுடன் ஏற்றிக்கொள்வதற்கான ஆர்வத்தையும் தூண்டவேண்டும். எதிர்ப்பு சக்தியை உருவாக்கக் கூடிய உணவுவகைளை அன்றாட உணவுவேளைகளில் இணைத்துக்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். இரண்டு முறைகள் ஏற்றப்பட்ட தடுப்பு மருந்துகளால், கொரோனா தொற்றாமல் இருப்பதை தடுத்தாற்கொள்ள முடியுமென சில நாடுகள் அறிவித்திருக்கின்றன. ஆனாலும், முழுமையாக தடுத்தாற் கொள்ளமுடியுமா என்பது, கேள்விக்குறியாகவே இருக்கிறது.

ஆகையால், கொரோனா தடுப்பூசிகளுக்கு அப்பாற்சென்று, எதிர்ப்புச் சக்தியை உருவாக்கிக்கொள்வதே உசிதமானது. அது கொரோனாவை மட்டுமன்றி, ஏனைய நோய்களிலிருந்தும் ஒவ்வொருவரையும் பாதுகாத்துக் கொள்ளும். கொரோனாவின் முடக்கத்தால் பட்டினிச் சாவு இடம்பெறவில்லை. ஓரிரு வேளைகளை தவிர்த்து அல்லது ஓரிண்டு நாள்களைத் தவிர்த்து, அரை, கால் வயிறுகள் நிரப்பப்பட்டன. ஆனாலும், ஒருவேளை சாப்பிட்டுவிட்டோம் என திருப்தி கொள்ளாது; சத்துணவுகளை உண்ணவேண்டும். அதுவும் நமது கரங்களிலேயே உள்ளதென்பதை மீண்டும் நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

யாவருக்கும் சுயபுத்தி உண்டு. வாழ்ககையில் புது,புது அனுபவங்களூடாக வருகின்ற பகுத்தறிவை, மிகவும் நுட்பமாக பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பதே சுய புத்தியாகும்.

எல்லா விஷயங்களையும் சொல்லிக் கொடுத்தப்படி இருக்க முடியாது. பல விடயங்களை நாங்கள் தேட வேண்டியுள்ளது.

மேலும் தனது முழுமுயற்சியுடன் நல்ல முடிவை அறிவதே மகிழ்ச்சிகரமானது. கால மாற்றங்கள் அறிவை, அதன் தேவைகளை எமக்கு உணர்த்தியே தீரும்.

அச்சப்படுவதால் மனிதன் முடிவை எடுக்கத் தயங்குகின்றான். தோல்விகளால் மனிதன் எழுவது எப்படி என உண்மையை தனது சுய அனுபவத்தால் அறிந்து கொள்கின்றான்.

உலகில் பல அச்சரியங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. அத்துடன் பேரழிவுகள், யுத்தங்கள், பஞ்சம் என பல இடர்களைச் சந்திக்காமல் இருக்கமுடியாது. உலகம் முழுவதிலும் எதுவும் நடக்கலாம். இவற்றை கடந்து செல்வதே மனித வாழ்க்கை. சக்தி, துணிவுடன் இயங்குக.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# காலம் கடந்து வரும் ஞானம்



இல. அதிரன்

மரத்தால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்தல், தவித்த முயல் அடித்தல், காற்றுள்ளபோது தூற்றல், தனக்கு வந்தால்தான் தலைவலியும் காய்ச்சலும், தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்கு படக்கென்னுதாம் இதெல்லாம் பழமொழிகள்தான். ஒன்றுக்கொன்று தொடர்பும் இல்லாதவைகள் தான்.

ஆனால், அண்மைய சம்பவங்களைப் பார்க்கும்போது இவையெல்லாம் நினைவுக்கு வருகின்றன. இலங்கையின் இனப்பிரச்சினையும் வடக்கு கிழக்கும், சிறுபான்மை மக்களின் நிலைகளும் இவை எல்லாவற்றுக்கும் பொருத்தமானதுதான்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம்.ஹரிஸ் கடந்த புதன்கிழமை (07) உரையாற்றும்போது "சில தமிழ் அரசியல் கைதிகள், கடந்த மாதம் விடுதலை செய்யப்பட்டனர். இன்னும் பல தமிழ் சகோதரர்கள் அரசியல் கைதிகளாக சிறையில் உள்ளார்கள். அவர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். அக்கருத்து வரவேற்கத்தக்கதொன்று. தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியானது. ஆதரவான குரல் என்று குறிப்பிட்டளவு தமிழர்கள் மகிழ்ந்தாலும், இது உண்மையான கருத்து தானா, தமிழ் மக்கள் மீது கொண்ட அக்கறையால் வந்ததா என்று நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படியானால் அதன் தொடர்ச்சியாகச் சில விடயங்கள் நடைபெற்றுவிடும். அதில் முக்கியானது அவருடைய மாவட்டத்தின் கல்முனை தமிழ்ப் பிரிவு விவகாரம்.

அவருடைய கருத்து உண்மையில், பயங்கரவாதச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற சக உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான ரிஷாட் பத்தியுதீனுடைய விடுதலையை நோக்காகக் கொண்டதே தவிர, தமிழ் மக்கள் மீதான அக்கறை கொண்டதல்ல என்பது இதில் முக்கியமானது. இதற்குத்தான், 'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான்' என்று சொல்வார்கள்.

ஒன்றை அனுபவிக்கும் போது மட்டுமே, அதனால் ஏற்படுகின்ற வலியை நாம் உணர முடியும். இலங்கையின் வரலாற்றில் காலங்காலமாக பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு ஆதரவாகவே கை உயர்த்திய தரப்பாக இருக்கின்ற முஸ்லிம் தரப்பு, இப்போது தம்முடையவர்களுக்கெதிராக அது திரும்பியிருக்கின்றபோது, அதனை வேண்டாமென்று ஆதரவளிக்கின்ற தன்மை இருக்கின்றது. காற்றுள்ளபோதெல்லாம் தூற்றிக் கொண்டே வாழ்ந்து, காலம் கடந்தபின் ஞானம் வந்தென்ன செய்வதென்பதுதான் இதற்குப் பதில். ஆனாலும் காலம் கடக்கும் போதும் அதன் பயனை அனுபவிக்கவே, துடிக்கிறார்கள் என்பதற்கு நல்ல உதாரணமாகவும் கொள்ளலாம்.

நாட்டின் உயரிய சபையில் தமிழர்களுக்கு ஆதரவளிப்பது போன்ற ஒரு மாயையைக் காட்டிக் கொண்டு, அம்பாறை மாவட்டத்தின் கல்முனையில் நடைபெறும் ஒருகோரமுகத்துடனான அடக்குமுறையை எவ்வாறு நாம் பார்க்கலாம் என்பதே, இக் கட்டுரையின் கேள்வி.

காலங்காலமாகப் பற்றிஎரிந்து கொண்டிருக்கும் கல்முனைத் தமிழ்ப்பிரிவு உப பிரதேச செயலகம், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்புதான் தரம் இறக்கப்பட்டது. தரம் உயர்த்துவது பற்றிப் பேசிக் கொண்டிருக்கையிலேயே நாடாளுமன்றத்தில் 20ஆவது திருத்தத்துக்குக் கை உயர்த்தி பெற்றுக் கொண்ட வெகுமதிகளில் ஒன்றாக அது இருந்தது.

சிறுபான்மை மக்கள் தங்களுடைய உரிமைகளை தமக்குள்ளேயேயே பகிர்ந்து கொள்ளத்தயாரில்லாத நிலைமைக்கு கல்முனை தமிழ்ப்பிரிவு நல்லதோர் உதாரணமாகும். நிலத் தொடர்பில்லாத பிரதேச செயலகங்கள், நிலத் தொடர்பில்லாத கல்வி வலயங்கள் கிழக்கில் காணப்படுகின்றன. நிலத்தொடர்பில்லாத மாவட்டம், மாகாணம் கூட உருவாகலாம் என்று முயற்சிகள் செய்யப்படுகின்றன. இருந்தாலும் இருந்து வந்ததை, இருப்பதை அனுமதிப்பதில் சிரமம் இருக்கிறது. அதற்குக் கல்முனை நல்ல சாட்சி.

நம்மவர்களுக்கு நன்கு தெரிந்த வாசகம், 'அரசன் கொடுத்தாலும் மந்திரி கொடான்'; 'கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரிதான் பிரச்சினை' இது போன்றதுதான் கல்முனை தமிழ்ப் பிரிவு விவகாரம். அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தாலும் அதனைத் தடுப்பதற்கு அரசியல் இருக்கிறது.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம், 1989இல் சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் பிரிவாக இயங்கி, 1993ஆம் ஆண்டு முதல் இற்றை வரை உப பிரதேச செயலகமாக இயங்குகிறது. காணி, நிதிவளம் அற்றதாக இயங்கும் இப்பிரதேச செயலகத்துக்குக் கணக்காளர் நியமிப்பு இதுவரையில் நடைபெறவில்லை. 'சாண் ஏற முழம் சறுக்கும்' தமிழர் அரசியலில், சாத்தியங்கள் கடந்த நல்லாட்சியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் வலுப்பெற்ற வேளை, நாட்டில் ஏற்பட்ட ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான முரண்பாடு, ஈஸ்ரர் தாக்குதல், பிரதமர் மாற்றம், ஆட்சிக்குழப்பம் உள்ளிட்ட பல அதைக் குழப்பியடித்தன.

ஏற்கெனவே 1993இல் அமைச்சரவை ஒப்புதல் கிடைத்து, அவ்வேளையில் நாட்டில் ஏனைய பகுதிகளில் இருந்த உப பிரதேச செயலகங்கள் பிரதேச செயலகங்களாக தரம் உயர்த்தப்பட்டன. அதற்குப் பின்னர், பல பிரதேச செயலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டும் இருக்கின்றன.

இவ்வாறான நிலையில் கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகமே நிறைவுபெறாத ஒன்று. முஸ்லிம்களின் அரசியல் பலம் காரணமாக, நிகழ்கின்ற அடக்கு முறையான பல்வேறு செயற்பாடுகள் குறித்து, பல்வேறு விமர்சனங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

கல்முனை தமிழ்ப் பிரிவு 30 வருடங்களை தாண்டியும் நிறைவேறாத கனவாகவே இருந்து கொண்டிருக்கிறது. இதனை வைத்தே முஸ்லிம் அரசியல்வாதிகளும், சில தமிழ் அரசியல்வாதிகளும் தேர்தல்களில் போட்டியிடுகிறார்கள்; காலத்தையும் கடத்துகிறார்கள்; மக்களையும் ஏமாற்றுகிறார்கள். ஆனால், யதார்த்தத்தைச் சொல்வதற்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும்தான் ஆட்களில்லை.

அந்தவகையில், கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தொடர்பில் இவ்வாறான அரசியல் தலைவர்களது நடவடிக்கைகள், தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதாகவே அமைந்திருக்கிறது.

நடைபெற்ற உண்ணாவிரதங்களும் அறிக்கைகளும் போராட்டங்களும், உத்தரவாதங்களும் இதுவரையில் எதையும் சாதித்துவிடவில்லை.

அதன் தொடர்ச்சியாகத்தான், கல்முனையில் கடந்த சில வாரங்களாக, காணி அபகரிப்புகள் தொடர்பிலான பிரச்சினைகள் ஏற்படத் தொடங்கியிருக்கின்றன. இது தொடர்பில், கல்முனை தமிழ் இளைஞர் சேனை என்ற அமைப்பு, தமிழ் பிரதேச காணிச்சுரண்டல்களையும் இனவாத செயற்பாடுகளையும் வன்மையாக கண்டிப்பதாக அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறது.

அதில், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்கள் வழங்கப்படாமல் திட்டமிட்டு தடுக்கப்படுவதும், கல்முனை வடக்கு பிரதேசத்திலுள்ள பொதுக்காணிகள் ஏனையோரால் அபகரிக்க முயற்சிப்பதும் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை மேலும் மேலும் வளர்க்கவே வழிகோலும். இவற்றுக்கு உரிய நடவடிக்கைகளை உரிய அதிகாரிகளும் அரசாங்கமும் எடுக்க வேண்டும். இவ்வாறான சம்வங்களும் இன முறுகல் நிலைகளும் உருவாகாமல் தடுக்க கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்களை வழங்கி, மக்கள் தங்கள் சேவைகளை வினைத்திறனாகவும் பாதிப்பின்றியும் பெறுவதற்கு அரசாங்கம் தீர்வைக்காண வேண்டும் என்பதே எல்லோரினதும் அவாவாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்வெளிப்பாடு இன்னமும் இந்த விவகாரம் பற்றிக்கொண்டிருக்கிறது என்பதாகும்.

அடிக்கடி ஒரு பொறி விழுவதும், அது பெருந்தீயாகப் பற்றி எரிவதும் பின்னர் தானாக அணைவதுபோன்று ஆகிவிடுவதும்தான் தமிழ் மக்களின் நிலைப்பாடு. 'பிட்டும் தேங்காய்ப்பூவும் போல' என்று வெளியில் பொது வெளியில் பேசிக்கொண்டு, உள்ளே வேறுவிதமாகச் செயற்படும் பாங்கு, கிழக்கில் தமிழ்- முஸ்லிம்களுக்கிடையில் இருக்கிறது என்பது வெளிப்படை. இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதே அனைவருடையதும் கனவாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினை உருவான வேளை சிறுபான்மை, தமிழ் என்றிருந்த தமிழ், முஸ்லிம் மக்கள் காலப்போக்கில் பிரிந்து இருதுருவங்களானார்கள். அதன் பின்னர்தான் தமிழ்பேசும் என்று மாற்றம் பெற்றது. அதற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், இப்போதும் தமிழர் தரப்பு அவற்றையெல்லாம் மறந்து சகோதரர்களாக வாழ்வோம் என்றே சொல்கிறார்கள்; முயற்சி செய்கிறார்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தீராத நம்பிக்கையாக இருக்கின்ற, முஸ்லிம்களின் இணக்கப்பாட்டுடன் கல்முனைத் தமிழ்ப்பிரிவு பற்றிய பிரச்சினை முடிவுக்குவரும் என்பது நிறைவேற வேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மீது இப்போதும் இருக்கின்ற கடந்த கிழக்கு மாகாண சபையில் முதலமைச்சை முஸ்லிம் காங்கிரஸுக்கு தாரை வார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டு தீராமைக்கு பல காரணங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று கல்முனை தமிழ்ப்பிரிவு.

மக்களின் ஏமாற்றம் தொடர்ந்து கொண்டிருக்கின்ற வேளையில், தமிழ் அரசியல் கைதிகள் மீது ஏற்பட்ட கருணை தமிழ் மக்கள் மீதும் ஏற்பட வேண்டும். கல்முனை தமிழ்ப்பிரிவு தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வரவேண்டும் என்றே நம்புவோம்.

## கடிதங்கள்

### வெளிச்சம் கிடைக்குமா?

கிளிநொச்சி, கிராஞ்சி பகுதியில் இறங்குதுறை, வெளிச்ச வீடு இன்மை மற்றும் கடலட்டைப் பண்ணைகள் என்பவற்றால் தங்களுடைய கடற்றொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக கிராஞ்சி கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு சுமார் 200க்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் உள்ளனர். குறிப்பாக, இந்தப் பிரதேசத்தில் சிறு கடற்றொழில் மற்றும் ஆழ்கடல் நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

தங்களுடைய படகுகளை நிறுத்தி வைப்பதற்கும் படகுகளை தொழிலுக்குக் கொண்டு சென்று, கரை சேர்ப்பதற்கும் ஏற்ற வகையில் இறங்குதுறைகள் இல்லாமையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்

அத்துடன், புரெவிப் புயல் காரணமாக தமது படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களும் சேதமடைந்தன எனவும் தெரிவித்ததுடன், தங்களுடைய பிரதேசங்களிலே அட்டை தொழில் வளர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த அட்டை பண்ணைகள் பல, சிறுகடல் பகுதிப் போக்குவரத்துப் பாதைகளில் காணப்படுவதால், தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அவர் தெரிவிக்கின்றனர்.

எனவே, தமது கடற்றொழிலை பாதுகாப்பாகத் தொடர்ந்தும் முன்னெடுக்க வழிவகைகளை ஏற்படுத்தித் தருமாறு, கிராஞ்சி கடற்றொழிலாளர்கள் வேண்டிநிற்கின்றனர்.

– சுப்பிரமணியம் பாஸ்கரன்

வாய்ப்பை தவறவிடாது பயன்படுத்தினால்

# வெற்றி நிச்சயம்

## தென்கிழக்கு பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை பேராசிரியர் கலாநிதி செ. குணபாலன்

வி.ரி. சகாதேவராஜா

வாழ்க்கையில் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்போதெல்லாம், அவற்றைத் தவறாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வாய்ப்பைத் தவறவிட்டுவிட்டு, மற்றவர் மீது குறைகூறுவதில் எவ்வித பிரயோசனமுமில்லை. கிடைக்கும் வாய்ப்பை சரிவரப் பயன்படுத்தினால் வெற்றி நிச்சயம் இவ்வாறு கூறுகிறார், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்துறைப் பேராசிரியர் கலாநிதி செல்வரெத்தினம் குணபாலன்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில் பேராசிரியரான முதல் தமிழ்மகன் என்ற பெருமை, கடந்த வாரம் பேராசிரியரான பேராசிரியர் செ. குணபாலனையே சாருகிறது.

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் 'முத்தமிழ்வித்தகர்' சுவாமி விபுலாநந்த அடிகளார், கிழக்கு மாகாணத்தில் முதலாவது பேராசிரியராக விளங்கினார். அவருக்கு பின்னர், கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் பல பேராசிரியர்கள் உருவானபோதிலும் தமிழ்ச் சமுகத்தைப் பொறுத்தவரை, சுவாமி விபுலாநந்தருக்குப் பிறகு அவர் பிறந்த காரைதீவில், இருவர் பேராசிரியனானார்கள். அதுதவிர, மாவட்டத்தின் கல்முனை திருக்கோவில் பிராந்தியங்களில் வேறு யாரும் உருவாகவில்லை.

இந்நிலையில், அந்த வரலாற்றைத் தகர்த்து திருக்கோவில் பிராந்தியத்திலிருந்து முதலாவது பேராசிரியராக தெரிவாகியுள்ளார் 54 வயதான பேராசிரியர் கலாநிதி செ. குணபாலன். அதுவும், சமகாலத்தில் அம்பாறை மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஒரேயொரு தமிழ்ச் சமுக பேராசிரியராக இவர் விளங்குகிறார்.

காரைதீவைச் சேர்ந்த செல்வரெத்தினம் பொன்னம்மா தம்பதியினரின் புதல்வரான செ. குணபாலன் வினாயகபுரத்தில் பிறந்து, தம்பிலுவிலில் மனைவி நான்கு பிள்ளைகளுடன் வாழ்ந்துவருகிறார். அவர் ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் தர்மபாலன், புனிதவதி, பாமா, யாழ். நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர் தனபாலன், மட்டக்களப்பு தொழில்நுட்பக்கல்லூரி பணிப்பாளர் ஜெயபாலன் ஆகியோரின் சகோதரராவார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பகால விரிவுரையாளர்களில் ஒருவரான இவர், பல்கலைக்கழகத்தில் 20 வருட விரிவுரையாளர் சேவையைக் கொண்ட தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் இரு தடவைகள் பீடாதிபதியாகக் கடமையாற்றிய கலாநிதி எஸ். குணபாலன் முகாமைத்துவப் பேராசிரியராக 12.12.2019 ஆம் திகதியிலிருந்து செயற்படும்

செல்வரத்தினம் மற்றும் லட்சுமி (பொன்னம்மா) தம்பதியினரின் புதல்வரான இவர் ,தனது ஆரம்பக்கல்வியை திருக்கோவில் வினாயகபுரம் மகா வித்தியாலயத்திலும், பின்னர் இடைநிலைக்கல்வியை தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம், உயர்தரக் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்றார்.

தனது நிருவாகமானி சிறப்புப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், முதுமாணிப் பட்டத்தை களனி மற்றும் இந்தியாவின் அழகப்பா பல்கலைக்கழகத்திலும் பெற்று கலாநிதிப் பட்டத்தை இந்தியாவின் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலும் பெற்றிருந்தார்.

இத்தகைய பெருமைக்குரிய வரலாற்று சாதனையாளர் பேராசிரியர் குணபாலன் 'தமிழ்மிரர்' பத்திரிகைக்கு தந்த செவ்வி இது.

**கேள்வி: தாங்கள் சிறுவயதில் கற்கும்போது இவ்வாறு பேராசிரியராக வரவேண்டும் என்ற எண்ணம் இருந்ததா?**

பதில்: காரைதீவிலிருந்து குடிபெயர்ந்து, வினாயகபுரத்தில் வாழ்ந்துபோது, அங்கு நான் ஆண்டு 1 தொடக்கம் 5 வரை படித்தேன். பின்பு தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் படிக்கமுடிந்தது.





வினாயகபுரத்திலிருந்து காட்டுப் பகுதியூடாக 3 கி.மீற்றர் தூரம் நடந்துவந்தே கல்விகற்றோம். காரைதீவிலிருக்கும் அப்பப்பா சித்தப்பாமார் கல்வியில் சிறந்து விளங்கியமை கற்பதற்கு முதல் காரணமாகும். காரைதீவு ஓர் அற்புதமான ஊர். சுவாமி விபுலாநந்தர் அதன் சிற்பி. அண்ணா தர்மபாலன் வெரிற்றாஸ் கல்வி நிலையத்தை நடத்தியிருந்தார். ஆனாலும் அன்று, பல்கலைக்கழகம், பேராசிரியர் என்ற விழிப்புணர்வு இருக்கவில்லை. இருப்பினும் சகோதரர்களின் உந்துதல் ஆர்வத்தைத் தந்தது. கற்பித்த ஆசிரியர்களும் ஒரு காரணம்.

> **இலக்கில் கவனமாக இருக்கும் பிள்ளை வெற்றிபெறும். கொரோனா ஒரு பொருட்டல்ல. வாய்ப்பை பயன்படுத்தி முன்னேறமுடியும்**

உண்மையில், பல்கலைக்கழகத்துக்குச் சென்ற பின்னரே விரிவுரையாளராக, பேராசிரியராக வரவேண்டும் என்ற எண்ணம் ஆர்வம் வந்தது. தம்பிலுவில் மகாவித்தியாலயத்தில் சச்சிதானந்தசிவம் (காரைதீவு) அதிபராக இருந்தார் அவரொரு 'றோல்மொடல்' . யுத்தம் காரணமாக யாழுக்குச் சென்று, படிக்க நேர்ந்தது. அங்கு நாகரெத்தினம் அம்மாவின் குடும்பம், எனக்குப் பூரணமாக உதவியது. சென்.பற்றிக் கல்லூரியில் படிக்க சுந்தரலிங்கம் ஜிஎஸ் உதவினார். பற்றிக்ஸ் கல்லூரியில் வர்த்தகப் பிரிவில் படித்தேன். சிறந்தபெறுபேற்றுக்கான விருதுகள், மாணவர் தலைவர், 'வெஸ்ற் சுடன்ற் கொஸ்ரல் எவார்ட்'அனைத்து கண்ணியங்களும் கிடைத்ன. கத்தோலிக்க பாடசாலையான அங்கு நானோர் இந்துவுக்கு மாணவர் தலைவர் தேர்தலில் முதலிடம் கிடைத்து தலைவரானேன். அதுவோர் அங்கீகாரமாகவிருந்தது. பிரான்சிஸ், அருமைநாயகம், ஸ்ரனிஸ்லாஸ் அனைவரையும் மறக்கமுடியாது.

**கேள்வி: யாழ். பல்கலைக்கழகத்தில் முதல்நிலை பட்டப்படிப்பை பூர்த்திசெய்துள்ளீர்கள். உங்கள் அனுபவம் பற்றி கூறுவீர்களா?**

பதில்: யாழ்.பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவபீடம் கிடைத்து, விடுதியில் தங்கி கற்றேன். கற்கும்காலத்தில் வர்த்தக முகாமைத்துவ பீட மாணவஅணியின் தலைவராக இருந்திருக்கிறேன். அங்கு இரண்டாம்நிலை 'அப்பர்' பெறுபேறு கிடைத்தது. அங்கே போதனாசிரியராக இருந்து ஒருவருடம் சம்மாந்துறை இணைந்தபல்கலைக்கழத்தில் விரிவரையாளராக இருந்தேன். பேராசிரியர் காதர்சேர் அந்து வாய்ப்பை தந்தார். பின்பு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் கல்விக்கான வாய்ப்பை நிறைய ஏற்படுத்தித்தந்தது.

**கேள்வி: தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான முதல் தமிழர் நீங்கள். அது வரலாறு. அது பற்றிக் கூறுவீர்களா?**

பதில்: அங்கு மூன்று இன மாணவர்களும் வேறுபாடின்றி கற்கிறார்கள். பல்கலாசார பாரம்பரிய புனிதபூமி அது. தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் தமிழர் ஒருவர் பேராசிரியராக வந்தமை என்பது புதுமையல்ல. தகைமையும் திறமையும் இருந்தால் யாரும் பேராசிரியராக வரலாம். அனைவருக்கும் அந்த வாய்ப்பு கிடைக்கும். ஏலவே கலாநிதி பத்மரஞ்சன் இருந்தார். அவரிருந்திருந்தால் அவரும் பேராசிரியராகி இருப்பார். இன்னும் சிலர் இருந்தனர்; நாடைவிட்டு வேறு பல்கலைக்கழகத்துக்குச் சென்றனர். தென்கிழக்கு பல்கலைக்கழகம் நிதியுதவி உதவிகளைச் செய்து வாய்ப்புத் தந்தது. வாய்ப்புகளை பயன்படுத்தவேண்டும். வாய்ப்பை விட்டுவிட்டு விமர்சனங்களைச் செய்வதில் பிரயோசனமில்லை.

இங்கு இடம்பெயர்ந்து வந்த மாணவர் தொடக்கம் இன்று வரை சகல மாணவர்களும் அன்பாக, சகோதார உணர்வுடன் பழகியுள்ளனர். எம்மிடம் திறமையிருந்தால் முன்னேற்றலாம். மாணவர்கள் தமக்கான சூழலை மாற்றிக்கொண்டு முன்னேற வேண்டும். பெற்றோர்களை கஸ்டப்படுத்தி வரமுடியாது. கல்வியை உணர்ந்துகொண்டு முன்னேறினேன். இறைவனுக்கும் நன்றி கூறவேண்டும்.

கேள்வி: பேராசிரியரான இந்த வேளையில் பாடசாலை மாணவருக்கு நீங்கள் என்ன சொல்ல விளைகிறீர்கள்?

பதில்: மாணவர்கள் மகத்தானவர்கள். எங்களில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது கல்வி ஒன்றுதான். சமுகத்தை மாற்றக்கூடியதும் கல்விதான். உலகின் அனைத்து மாற்றங்களுக்கும் உரிய ஆயுதம் கல்வி. நீண்டகாலம் போராட்டம் நடத்திய நெல்சன்மண்டேலா அனுபவத்தின் மூலமாக வறுமை, அறியாமை, மூடநம்பிக்கையை மாற்றும் ஆயுதம் கல்விதான் என்றார். எனவே. வருகின்ற வாய்ப்பைப் பயன்படுத்தவேண்டும். நாம் படித்தது போர்ச்சூழல்; கஸ்டப்பட்டுப் படித்தேன்; வாய்ப்பைப் பயன்படுத்தினேன். சிறந்த 'நெற்வேர்க்' ஏற்படுத்துங்கள். உறவுகளையும் தொடர்புகளையும் பேணவேண்டும்.

பெற்றோர் என்றும் பிள்ளைகளை விரும்பி பெரியாளாக்க விரும்புகின்றனர். ஆனால், பிள்ளைகள் பெற்றோரை சிலவேளை மதிக்காத சந்தர்ப்பம்மிருக்கிறது. அதுபிழை. அரசாங்கம் நிறைய வாய்ப்புகளை வழங்கிவைத்துள்ளது. புதிய அரசாங்கம் புதிய மாணவர்களை பல மடங்கு அதிகரித்துள்ளது. ஜனாதிபதி மற்றும் மானிய ஆணைக்குழு மாணவர்களை அதிகரிக்க வேண்டும். அதற்கான வசதிகளை அதிகரிக்க வேண்டும் எனக்கூறியிருக்கின்றன. பல்கலைக்குத் தெரிவாகும் அனைத்து மாணவர்களையும் உள்ளீர்க்கலாம். அரசாங்கம் 10 சிற்றி பல்கலைக்கழகங்ளை உருவாக்கவுள்ளது. அதைப்பயன்படுத்த வேண்டும்.

**கேள்வி: பேராசிரியராக வரவேண்டும் என்ற ஆர்வத்தை வைராக்கியத்தை ஏற்படுத்திய காரணிகள் என்னென்ன?**

பதில்: பேராசிரியராக வரவேண்டும் என்ற வைராக்கியம் எனது தூரநோக்காக இருந்தது. எந்த மாணவரும் தூரநோக்கை நிர்ணயித்து முன்னேற வேண்டும். நான் கற்பிக்கும்போது சகல மாணவர்களுக்கும் அதயையே கற்பிப்பது வழமை.

பேராசிரியராக வருவதற்கு வாய்ப்பைத் தந்தது பல்கலைக்கழங்கள்தான். காரணம். விரிவரையாளராகச் சேர்ந்த உடனே எனக்கு பேராசிரியராக வரவேண்டும் என்று ஆர்வம் தூண்டியது. எமது துணைவேந்தராகவிருந்த பேராசிரியர் காதர் இஸ்மாயில் நாஜிம், சக பீட விரிவுரையாளர்கள் சேர்ந்து பயணித்தோம். என்னை நம்பி பல்கலைக்கழகத்தினர் துணைத்தலைவராக, தலைவராக, பீடாதிபதியாக ஒப்படைத்திருந்தனர். அதுவும் ஆர்வத்தைத் தூண்டியது. யாழ். பல்கலைக்கழக நண்பர்கள், தாமாக வந்து உதவுவார்கள்.




> **நாம் படித்தது போர்ச்சுழல்; கஸ்ட்ப்பட்டுப் படித்தேன்; வாய்ப்பைப் பயன்படுத்தினேன். சிறந்த 'நெற்வேர்க்' ஏற்படுத்துங்கள். உறவுகளையும் தொடர்புகளையும் பேணவேண்டும்**

**கேள்வி: இன்றைய கொரோனாச் சூழல் கல்வியைப் பாதித்துவருகிறதே. அதுபற்றி பரிகாரம் ஏதாவது சொல்லவிளைகிறீர்களா?**

பதில்: இன்றைய கொரோனாவை வைத்துக் கொண்டு அனைத்தும் முடிந்துவிட்டது. இனியெங்கு படிபப்து என நினைக்கவேண்டாம். எதுவும் நிரந்தரமல்ல; இதுவும் கடந்துபோகும். நாம் பிழைக்கவேண்டும். அரசாங்கம் நிகழ்நிலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. இடைக்காலத்தில் அதனை கற்றால் பின்னர் நிலைமை சரியாகும். அப்போது வழமையான கற்றலை மேற்கொள்ளலாம் . எனவே நம்பிக்கை தளராமல் படியுங்கள்.

இலக்கில் கவனமாக இருக்கும் பிள்ளை வெற்றிபெறும். கொரோனா ஒரு பொருட்டல்ல. வாய்ப்பை பயன்படுத்தி முன்னேறமுடியும்..போட்டிப் பரீட்சை; எனவே போட்டிபோட்டுப் படிக்கவேண்டும். நாம் படிக்காமல் மற்றவர்களைப் பிழைசொல்ல முடியாது.

உயர்தரம் கற்கும் இரண்டு வருடத்தைத் தியாகம் செய்தால் முன்னேறலாம். பல்கலைக்கழகத்தில் விரைவாகப் பட்டத்தை முடிக்க நினைக்கிறார்கள். ஆனால் விசேட பட்டப் படிப்பை படிக்க வேண்டும். நிறைய புலமைப்பரிசில் பெற்று படியுங்கள். அரசாங்கம் கல்விக்காக பலகோடி ரூபாய்களைக் கொட்டுகிறது. எனவே, நாம் நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்ய முன்வரவேண்டும். நாட்டுக்குப் பங்களிப்பு சேவை செய்யுங்கள். கற்றுவிட்டு வெளிநாட்டில் படிக்கப்போனவர்கள் அங்கு நிற்காமல் நாட்டுக்கு வந்து சேவை செய்யவேண்டும். கற்ற பாடசாலையை நினையுங்கள். கிராமத்தை நினையுங்கள். அனைவரும் முன்னேறலாம்.



மருத்துவத்துவ கல்விக்கு உதவும்

# ஷேக்ஸ்பியரின் கதாபாத்திரங்கள்

ஆர். இராஜலிங்கம்

ஷேக்ஸ்பியர் ஓர்ஆங்கில நாவலாசிரியர், கவிஞர், நடிகர் என்பது அநேகர் அறிந்த விடயம். இவர் மருத்துவ கல்விக்கு மிகுந்த சேவையாற்றியுள்ளமை அநேகருக்கு தெரியாது. இவர் தனது படைப்புகள் மூலம் மருத்துவ கல்விக்கு மிகுந்த சேவையாற்றியுள்ளார்.

இவரைப்பற்றி எடின்பரோ பல்கலைக்hழக பிரபல நோய் தடுப்பு சிகிச்சை நிபுணர் டொக்டர் டேவிட் ஜெப்ரே என்ன கூறியுள்ளார் என்று பார்ப்போம். எடின்பரோ பல்கலைக்கழகம் 1582 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஆறாவது பழைய பல்கலைக்கழகமாகும்.

மருத்துவ மாணவர்கள் நோயாளர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு அவர்கள் ஷேக்ஸ்பியரின் படைப்புகளை தங்களின் பயிற்சியின் ஓர் அம்சமாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று டொக்டர் டேவிட் ஜெப்ரே கூறியுள்ளார்.

ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் எக்காலத்துக்கும் பொருத்தமானவையாகவும் பயன்படுபவையாகவும் உள்ளன. எக்காலத்திலும் ஒரு சிறந்த நாடக ஆசிரியராகவும் இருப்பவர் இவர். இரக்க உணர்வுக்கு பெயர்பெற்றவர். உளவியல் மற்றும் சமூகசிந்தனையில் உயர்வுமிக்கவர். நோயாளர்களின் கவலை, உணர்வுபூர்வ எண்ணங்களை மருத்துவர்கள் அறிந்துகொள்வது அவசியம். ஆதலால் மருத்துவ மாணவர்கள் இவற்றை அறிந்துகொள்ள வேண்டியது மிக அவசியம் என்று டொக்டர் ஜெப்ரே தெரிவித்துள்ளார்.

> **அந்த வேதனையின் வெளிப்பாடுகளை அவர் எழுதிய மெக்பெத், கிங் லியர் பொன்ற நாடகங்களில் காணக்கூடியதாக உள்ளது**

இந்த வகையில் மருத்துவ மாணவர்கள் ஷேக்ஸ்பியரின் படைப்புகளிலிருந்து நன்மையைப் பெற்றுக் கொள்ளலாம். ஷேக்ஸ்பியரின் உழைப்பு மருத்துவ இளங்கலை பாடத்திட்டத்தில் மிகுந்த உதவி புரியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மருத்துவ பயிற்சியில் நோயாளர்களின் உணர்வுபூர்வமான விடயங்களைக் கற்றுக்கொள்வது மிகவும் அவசியம். தற்போதைய நிலையில் மருத்துவர்கள் நோயாளர்களிடமிருந்து விலகி இருப்பதையும் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் தவிர்ப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. மருத்துவ துறையில் இது ஒரு கவலைக்குரிய விடயமாகும். ஆனால் மருத்துவர்களுக்கும் நோயாளர்களுக்கும் இடையில் உள்ள இந்த இடைவெளியை நீக்கி இரு தரப்பினரும் நோயாளர்களின் நலனுக்காக நெருக்கமான உறவை பேணிக் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

முக்கியமாக நோயாளர்கள் உள ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கும் வேளையில் அவர்களுக்கு நிச்சயம் மருத்துவர்களின் இத்தகைய தொடர்பு மிகவும் அவசியமாகும்.

மருத்துவ மாணவர்கள் நோயாளர்ளுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு அவர்கள் ஷேக்பியரின் படைப்புகளை தங்களின் பயிற்சியின் ஓர் அம்சமாக சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்த நிலைமையானது பிரிக்கப்பட்ட கவலை என்னும் ஒரு செயல்முறையாகும். ஷேக்ஸ்பியரின் நோயாளர்களுடனான இந்த இரக்கம்மிக்க மற்றும் உணர்வுபூர்வமான எழுத்துகள் பாராட்டப்பட வேண்டியவை மட்டுமின்றி மருத்துவர்களுக்கு சிறந்த பாடமுமாகும். இத்தகைய நிலையை ஷேக்ஸ்பியரின் படைப்புகளில் வரும் பாத்திரங்கள்மூலம் அறிந்துகொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

ஷேக்ஸ்பியரின் த டெம்பஸ்ட். எஸ் ஐ லுக் இட், கிங் லியர் போன்ற சில படைப்புகளையும் அவர் இதற்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டினார். நெருக்கடியான காலகட்டங்களில் நமது எண்ணங்கள் எப்படியிருக்கும் என்பதை அறிந்துகொள்ளக்கூடிய திறன் அவரிடம் இருந்ததைக் காணக்கூடியதாக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். அவரின் இரக்க உணர்வுமிக்க அணுகுமுறை நாம் கற்றுக்கொள்ள வேண்டியது. . ஷேக்ஸ்பியரின் படைப்புகளின் படிப்பினையானது மருத்துவ மாணவர்களின் உணர்வுபூர்வ அணுகுமுறைகளை மேம்படுத்தும்.


> **முக்கியமாக நோயாளர்கள் உள ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கும் வேளையில் அவர்களுக்கு நிச்சயம் மருத்துவர்களின் இத்தகைய தொடர்பு மிகவும் அவசியமாகும்**

பிறரின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளக்கூடிய அவரின் கண்ணோட்டம் ஆழமடைந்ததற்கு காரணம் அவருடைய மகனின் மரணமாக இருக்கவேண்டும். 1596இல் அவருடைய மகன் இறந்ததையடுத்து அவர் மிகுந்த துன்பத்துக்குள்ளானார். அந்த வேதனையின் வெளிப்பாடுகளை அவர் எழுதிய மெக்பெத், கிங் லியர் பொன்ற நாடகங்களில் காணக்கூடியதாக உள்ளது.

# ‘வயிரு எங்கே கேட்டுச்சு’



ப.பிறின்சியா டிக்சி
p.p.dixci@gmail.com



மனிதர்களுக்கு ஏற்படுகின்ற வெவ்வேறு ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக, ஒவ்வொரு நிமிடங்களும் பல்வேறான போராட்டங்களை மனிதன் சந்தித்துக்கொண்டுதான் இருக்கிறான்.

இதில், பாலியல் ரீதியான திருப்தியைப் பெற்றுக்கொள்வது ஒருவகையான ஆசையாகும். அந்த ஆசை, மானத்தையும் விற்றுவிடும் அளவுக்கு சிலருக்கு அமைந்துவிடுகின்றது.

அதனைதான் “பழைய தொழில்” என்பர். உலகிலேயே மிகவும் பழைய தொழிலான அந்தத் தொழிலைச் செய்கின்ற பெண்களைத் தேடி, ஆண்கள் செல்வதற்கும், அந்தத் தொழிலை, பெண்கள் தேடிக்கொள்வதற்கும் அல்லது ஈடுபடுவதற்கும் பல்வேறான காரணங்கள் இருக்கின்றன.

அதிலொரு காரணம் தான் தனித்திருத்தல், அதேபோல, தன்னுடைய ஜோடியைப் பிரிந்திருத்தல் அல்லது மரணமடைந்திருத்தல் அதன்பின்னர் ஏற்படுகின்ற பாலியல் ஆசைகளைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்காக, பாலியல் தொழிலாளர்களை நாடுகின்றனர்.

தன்னுடைய ஜோடி, பாலியல் உறவுக்கு மறுகின்ற போதும், இவ்வாறான தொழிலாளர்களை, ஆண், பெண் என இருதரப்பினரும் நாடவேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது.

ஜோடியின் ‘சுயநலம் ‘ மற்றும் ‘ஒடுக்குமுறை ‘ ஆகியனவை காரணமாகவும், இந்தத் தொழிலாளர்களை நாடவேண்டிய நிலைமை சிலருக்கு ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

அந்த ஆசையைக் கொண்ட ஆண்கள், தங்களுக்கு அருகில் வரும்போது, அவர்களை திருப்திப்படுத்துவதற்காக, பாலியல் தொழிலாளர்களான பெண்கள் எந்நேரமும் தயாராகவே இருக்கின்றனர்.

எனினும், அந்த ஆசையே, இறுதியில் சமூக நோய்களைக் காவிக்கொள்ளும் அளவுக்குச் சென்றுவிடும் என்பதை யாரும் எளிதில் மறந்துவிடக்கூடாது.

அதனால்தான், தேவையான, பாகாப்பான உபகரணங்களைப் பயன்படுத்திக் கொள்வது உசித்தமானதென வைத்தியர்கள் அறிவுரை வழங்கியுள்ளனர்.

இருள் சூழ்ந்த இடத்தில் நிற்கும் அவர்களை, இருட்டும் காட்டிக்கொடுக்கும். காரிருளும் சிவப்பைக் காட்டிக்கொடுக்கும் என்பது போல, அத்தொழிலாளர் இருக்கும் இடத்துக்கு,“ரெட் லைட் ஏரியா” என்பர்.

கூவியழைக்கும் தொழிலாளர்கள், நடமாடும் தொழில்செய்வோர், குளிரூட்டப்பட்ட நன்கு திட்டமிட்ட, செல்வந்தர்கள் மட்டுமே சென்றுவருகின்ற இடங்கள், குடும்ப வறுமைக்காக, வீட்டுக்குள்ளேயே அத்தொழிலைச் செய்வோரென, இன்னுமின்னும் வகைப்படுத்திகொண்டே போகலாம்.

அத்தொழிலை, சிலர் நிர்ப்பந்தத்தின் பேரில் செய்கின்றனர். இன்னும் சிலர், அத்தொழிலுக்குள் தள்ளிவிட ப்ப ட்டு-ள்ளனர். குடும்ப சூழல், வறுமை, போதைக்கு அடிமையாகி, அத்தொழிலில் ஈடுபடுவோரும் உள்ளனர்.

பாலியல் தொழிலாளர்களிடம் சென்றவர்கள், திருப்தியுற்றனரா அல்லது பணம் உள்ளிட்ட பெறுமதியான பொருள்களை இழந்துவிட்டனரா அல்லது எதையாவது காவிக்கொண்டு (நோய்களை) வந்தனரா? என்பதற்கெல்லாம், அவர்களிடம் சென்றுவந்தவர்கள் மனந்திறந்தால் மட்டுமே அறிந்துகொள்ளமுடியும்.

எனினும், சதையை விற்றுப்பிழைக்கும் அப்பாவிப் பெண்களை, பாதுகாப்பு போர்வைக்குள் இருப்போர் உள்ளிட்டோர் சுரண்டாமலும் இல்லை.

கொழும்பு உள்ளிட்ட நகரங்களில், கூவியழைக்கும் பாலியல் தொழிலாளர்கள் பேசிக்கொள்வதையும், தரகுகாரர்கள் முணுமுணுப்பதையும் சாடைமாடையாகக் கேட்கையில், நமகே கூசும்.

அத பிஸ்னஸ் நே, (இன்று வியாபாரம் இல்லை), சின்ன பையன் ஒருத்தன் வந்தான், எல்லாத்தையும் சுருட்டிக்கிட்டு அனுப்பி விட்டேன் என்று பாலியல் தொழில் புரிவோரும்;

அத ஒயாட்ட வாசி நேத, (இன்றைக்கு உனக்கு வருமானம் தானே) பொய் சொல்லாதே, நான் பார்த்துகிட்டுதான் இருக்கேன், காலையிலேயே ஐந்து பேருடன் போனாய், எனக்கு உரிய பங்கு எங்கே? என்று தரகுப்பணம் கேட்போர் பச்சைப் பச்சையாக கேட்பதும் உண்டு.

இவையாயும், ஒருவேளை சாப்பாட்டுக்கு மட்டுமே என்று கூறினால் அது சரியாகிவிடும். ஆனால், இன்னும் சிலர் போதையேற்றுவதற்கும், இந்தத் தொழிலை செய்கின்றனர் என, பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு தொழில்புரிவோரை, சதைதிண்ணும் மனிதர்களும், சதையில் கிடைத்த வருமானத்தை சுரண்டித் திண்ணும் மனிதர்களும் ஏடெடுத்தும் பார்ப்பதில்லை. ஆனால்,

“ஊரிருல்ல மீசையெல்லாம் என்னை சுத்தி வந்துச்சி,
இள மனச கெடுத்துச்சி,
உசுர விட மானம் பெருசு, புத்திக்குத் தான் தெரிஞ்சிச்சு,
வயிரு எங்கே கேட்டுச்சு.
ஒரு சானு வயித்துக்குத் தான் எல்லாத்தையும் விக்கிறேன்.
நான் எல்லாத்தையும் விக்கிறேன்”

என்ற பாடல் வரிகள், பாலியல் தொழில் செய்யும் பெண்களின் பரிதாப வாழ்க்கையை, நறுக்கென்று சொல்லியிருக்கும் வரிகள். “ஈசன்” என்ற தென்னிந்தியத் திரைப்படத்தில் இடம்பெற்ற “ஜில்லா விட்டு ஜில்லா வந்த என் கதையை கேளுயா…” என ஆரம்பிக்கும் இந்தப் பாடல் அப்போது பட்டிதொட்டியெங்கும் முழங்கியது.

**அத பிஸ்னஸ் நே, அத ஒயாட்ட வாசி நேத**

பாலியல் குறித்து, இலங்கையில் அண்மைய காலங்களில் வெளிவந்த செய்திகள், பலரையும் விழி பிதுங்க வைத்திருந்தன. இலங்கையில் பாலியல் தொழிலாளர்கள் அதிகரிப்பு, “SEX” (செக்ஸ்) என்ற வார்த்தையை கூகுலில் தேடிய முதலாவது நகரம் என்பனவற்றை குறிப்பிட்டுச்சொல்லலாம். நாடளாவிய ரீதியில், விபசாரம் தொழில் செய்கின்ற பெண்கள், 35 ஆயிரம் பேர் உள்ளனர் என்றும், அவர்கள் நாளொன்றுக்கு மூன்று இலட்சம் ஆண்களுக்கு சேவை வழங்குகின்றனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

பாலியல் தொழிலாளர்கள் பெரும்பாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொருட்டே உருவாகின்றனர் அல்லது உருவாக்கப்படுகின்றனர் எனக் கூறலாம். காரணம், பெரும்பாலான பாலியல் தொழிலாளர்கள், அத்தொழிலுக்குத் தாம் பலவந்தமாகத் தள்ளப்பட்டனர் என்றே கூறுகின்றனர்.

இவர்களில், கிராமப்புறங்களிலிருந்து கஷ்டப்பட்ட குடுப்பங்களிலிருந்து, வீட்டு வேலைக்கென நகரங்களுக்கு அழைத்துவரப்படும் பெண்களே, கூவியழைக்கும் பாலியல் தொழிலுக்கு பலவந்தமாகத் தள்ளப்பட்டுள்ளனரென, பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதான நகரங்களில் தனியே தவிக்கவிடப்படுச் செல்லப்படும் பெண்களும் இத்தொழிலுக்கு பலவந்தமாமாகத் தள்ளிவிடப்படுகின்றனர். தவிர, ஒரு கட்டத்தில் விரும்பி பாலியல் தொழிலை ஏற்றுக்கொள்ளும் பெண்களும் இல்லாமலில்லை.

பாலியல் தொழில், இலங்கையில் தடைசெய்யப்பட்ட தொழிலாகக் காணப்படுகின்றது. எனவே, பாலியல் தொழில் மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் தொடர்பில் பொலிஸ் தலைமையக அறிக்கையில் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றன. தடையையும் மீறி, சட்டவிரோதமாக பாலியல் தொழிலை மேற்கொள்ள கையாளப்படும் நுட்பங்கள் மிகவும் விசித்திரமளிக்கக் கூடியனவாகவே இருக்கின்றன.

மசாஜ் நிலையங்களையும் தாண்டி, முச்சக்கரவண்டிகள், வான் உள்ளிட்ட நடமாடும் வாகனங்களிலும் இச்சேவை வழங்கப்படுகின்றது.என அறியக்கூடியதாய் இருக்கின்றது.

தெரிந்தோ அல்லது தெரியாமலே, அத்தொழில் ஈடுபடுகின்ற பெண்கள், தம்மை நாடிவரும் ஆண்களுக்கு, நோய்த்தொற்றைக் கொடுக்காமல் திருப்திப்படுத்தவேண்டும். அதேபோல, வாடிக்கையாளர்களான ஆண்களும், நோயைத் தொற்றிக்கொள்ளாமல் தற்காத்துக்கொள்ளவேண்டும்.

ஏனெனில், பாலியல் தொழிலாளர்கள் இருப்பதனால்தான், இளம்பெண்களின் கற்புகள் பாதுகாக்கப்படுவதாக, பரவலாக தெரிவிக்கப்பட்டது. இது எவ்வளவு தூரத்துக்கு உண்மையானது என்பதற்கு பதிலளிப்பதற்கு, அக்கேள்வியை இந்த சமூகத்திடம் பகிரங்கமாகவே விட்டுவிடுகின்றேன்.

எவ்வாறாயினும், பாலியல் தொழிலாளர்கள் மனிதாபிமானமாகப் பார்க்கப்படுகின்றனரா என்ற கேள்விக்கெல்லாம், அத்தொழில் ஈடுபடுவர்களிடமே பதிலிருக்கும்.

**“SEX” என்ற வார்த்தையை கூகுலில் தேடிய முதலாவது நகரம்**

அதற்கான விடையை கட்டுரையாளர் என்ற வகையில், நான் தேடுவது இலகுவான காரியமல்ல. என்றாலும், இலங்கையில் இருக்கின்ற பாலியல் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக, உத்தியோகபூர்வமான சங்கமொன்று உருவாக்கப்பட்டதாக 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதியன்று செய்தி வெளியாகியிருந்தது.

சிவில் சமூக அமைப்பைச் சேர்ந்த சிலர் இணைந்து உருவாக்கியிருந்த அவ்வமைப்பு, “பாலியல் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான மத்திய நிலையம்” என்றே பெயரிடப்பட்டிருந்தது.



இந்நிலையில், கொரோனா ஊரடங்கு அமுலால், பாலியல் தொழிலாளர்களும் பெரிதாக பாதிக்கப்பட்டிருந்தன. அதனால்தான், கட்டுபாடுகளை வாபஸ் பெறக்கோரி தாய்லாந்து பிரதமர் மாளிகையின் முன்பாக 2021ஜூலை 03 ஆம் திகதியன்று பாலியல் தொழிலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாலியல் தொழில் 10 சதவீதமளவுக்கு உள்ளது. பொழுதுபோக்கு துறையின் ஒரு பிரிவாக தாய்லாந்து நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பாலியல் தொழிலாளர்களின் (செக்ஸ் ஒர்க்கர்ஸ்) நிலைமை, அடுத்தடுத்த ஊரடங்கால் அவர்களின் தொழில் படுத்துவிட்டது.

மேலும், செக்ஸ் தொழிலாளர்களின் அடையாளங்களில் ஒன்றான ‘ஹை ஹீல்ஸ்’ காலணிகளை பிரதமர் மாளிகை முன் வைத்தும், கண்டன அட்டைகளை கையில் ஏந்தியும், ‘பிரா’, ‘பிகினி’ போன்ற உள்ளாடைகளை அணிந்தும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், பாலியல் தொழில் மூலம் 10 சதவீதம் அளவிற்கு அதன் பங்களிப்பு இருந்ததாக மதிப்பிடப்பட்டது. சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதில், தாய்லாந்து நாட்டின் செக்ஸ் தொழிலாளர்களின் பங்கு மிக அதிகம்.

ஆசையைத் தீர்க்கும், அவ்வாறான தொழிலாளர்களை இல்லாத நாடு என்றொன்றில்லை. அத்தொழிலை முற்றாக ஒழித்த நாடு, என்ற பெயர்பட்டியலிலும் ஒரு நாடேனும் இல்லை. எனினும், அந்தத் தொழிலுக்குத் தள்ளிவிடுபவர்கள் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.






கண்டவற்றிலும் கலைவண்ணம்

# சிரட்டையும் சொல்லாதோ கவி



சுப்பிரமணியம் பாஸ்கரன்



மரத்தால் யானை ஒன்று செய்தார்கள். யானை அச்சொட்டாக அவ்வாறே இருந்தது. அது யானை என்று கருதிப் பார்த்தவர்களுக்கு, அதை மரம் என்று நினைக்கத் தோன்றவில்லை. அதை மரம் என்று கருதிப் பார்த்தவர்களுக்கு, யானை என்று நினைக்கத் தோன்றவில்லை. இதைத்தான் திருமந்திரம் என்ற நூல், ‘மரத்தை மறைத்தது மாமத யானை; மரத்தில் மறைந்தது மாமத யானை’ - (திருமந்: 2290)

இவ்வாறே, தான் காண்பவற்றில் கலைவண்ணம் காணும்போது, எந்தப் பொருளில் உருவம் உருவாகின்றதோ, அந்தப் பொருளை அந்த உருவம் மறைத்துவிடுகின்றது. சிரட்டையில் குருவி உருவானால், அதைக் குருவி என்று கருதிப் பார்ப்பவர்களுக்கு அதைச் சிரட்டை என்று நினைக்கத் தோன்றவில்லை. இவ்வாறு மெய்மறந்து இரசிக்க வைக்கும் அற்புத கலைப் படைப்புகளை படைக்கும் படைபாளியாய் திகழ்கின்றார் செல்லமுத்து பொன்னம்பலம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட திருமுறிகண்டி பகுதியில் வாழ்ந்து வருகின்றார் இந்த அற்புத கலைஞன்.

சிரட்டைகளைப் பயன்படுத்தி கொக்கு, கொண்டைக்குருவி, காடை, வாத்து, போன்ற பறவைகளையும் மாடுகளின் கொம்புகளைப் பயன்படுத்தி காண்டாமிருகம், எருமை போன்ற விலங்குகளையும் மரத்தின் வேரைப் பயன்படுத்தி அழகிய அற்புத தத்ரூபமான உருவங்களையும் நைலோன் கயிறு, பல்துலக்கும் துரிகை ஆகியவற்றைப் பயன்படுத்தி கழுத்து மாலைகளையும் இவர் உருவாக்கும் பாங்கு அலாதியானது.

அழகியல் செறிவு மிக்க இவரது படைப்புகள், பல வெளநாட்டு இராஜதந்திரிகளின் வெளநாட்டு இல்லங்களில் வரவேற்பறைகளை அலங்கரித்த வண்ணம் இருப்பது இவரது



தனித்துவ திறனுக்கு எடுத்துக்காட்டாகும். 2001 முதலான சமாதான காலப்பகுதியில் அவ்வவ்போது கிளிநொச்சிக்கு சென்றிருந்த இராஜதந்திரிகளைக் கௌரவிக்கும் முகமாக அன்பளிப்புச் செய்யப்பட்ட நினைவுச் சின்னங்கள் இவருடையனவாகவே இருந்தன என்பது பெரும்பேறாகும்.

இத்தனைக்கும் தொழில் முறையாகவோ வரண்முறையாகவோ இக்கலையைக் கற்றுக் கொண்டவரல்ல; காண்பவற்றில் இருந்து கலைவண்ணம் காண்பதே இவரது தனித்துவம். அதுவே இவரது வாழ்வாதாரமாகவும் அமைந்திருந்தது.

முறிகண்டி சார்ந்த வீதிஓரங்கள் உட்பட, பல்வேறு இடங்களிலும் தனது கைவினைப் பொருட்களை வைத்து விற்பனை செய்யும் ‘செனாபோனா’ எனச் செல்லமாக அழைக்கப்படும் செல்லமுத்து பொன்னம்பலம் தனது கலைப் படைப்புகள் பற்றி, எம்முடன் பின்வருமாறு பகிர்ந்து கொண்டிருந்தார்.

“எனது கைவினைப் பொருட்களை, தங்களுடைய வீடுகளில் அலங்காரப் பொருட்களாகவும் அத்தியாவசிய பயன்பாட்டுக்கான பொருட்களாகவும் அதிகளாவானோர் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறான கைவினைப் பொருட்கள், எக்காலத்திலும் எல்லோரிடத்திலும் வரவேற்புப் பெறக் கூடியவையாகும். அவற்றின் விலைமதிப்பும் அதிகமாகவே இருக்கும்.

ஆனால், கைவினைப்பொருட்கள் தயாரிப்பில் ஈடுபடுபவர்களின் கலைத்துவமான எண்ணங்களின் வெளிப்பாடுகளை வெளிக்கொண்டு வருவதற்கு, அவர்கள் எதிர் கொள்ளும் சவால்கள், நெருக்கடிகள் ஏராளமானவை. அவர்களின் எண்ணங்களில் பிரசவிக்கின்ற கலைப் பொருட்களை மாத்திரம் இரசித்து மகிழ்கின்றோம். மாறாக, அதற்கு பின்னால் கலைஞர்களிடம் இருக்கின்ற கஸ்டங்கள் துன்பங்களைக் கண்டு கொள்வதில்லை என்பதுதான் உண்மை.

தற்போதைய கொறொனா வைரஸ் அச்சுத்தல் காரணமாக கலைஞர்களும் சிறு கைவினைப்பொருள் உற்பத்தியாளர்களும் தங்களுடைய பொருட்களை விற்பனை செய்வதில் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கி வருகிறார்கள். இதற்கு நான் விதிவிலக்கில்லை.

கைவினைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் சுற்றுலா பயணிகளின் வருகை இன்மை காரணமாக தொழில் வாய்ப்புகளை இழந்துள்ளனர். குறிப்பாக கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்ய முடியாத நிலையில், சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றோம்” என்கின்றார்.

2016ஆம் ஆண்டில் தேசிய அருங்கலைகள் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட ஜனாதிபதி கைப்பணி விருது, 2014ஆம் ஆண்டில் சிறந்த மரக் கைப்பணிக்கான விருது என, கடந்த 10 வருடங்களில் வடக்கு மாகாணத்தில் ஒன்பது தடவைகளும் மூன்று தடவைகள் தேசிய அருங்கலைகள் பேரவையினாலும் மூன்று தடவைகள் கௌரவம் பெற்ற சிறந்த கலைஞராகவும் மேன்மைப்படுத்தப்பட்டு கௌரவிக்கப்பட்ட கலைஞர் இவர்.

ஆனால், இவருடைய அத்தனை பேருக்கும் புகழுக்கும் தனித்துவத் திறமைக்கும் பின்னால், அவரது குடும்பங்கள் பல்வேறு சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டு இருக்கின்றது என்பதைப் பார்க்கும் போது, அந்தச் சோகங்களும் துன்பங்களும் களையப்பட வேண்டியவையே. ஒரு படைப்பாளியின் மனதில் நிம்மதி காணப்படும்போதுதான் அவனது படைப்புகளில் மேலும்மேலும் மெருகூட்டல்கள் இருக்கும்.

1994 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு மாற்றுத்திறனாளியான ஒரு பிள்ளையை பராமரிக்கும் நிலையிலும் மற்றுமொரு பிள்ளை திருமணம் செய்து ஒரு குழந்தையுடன் கணவனைப் பிரிந்து வாழும் நிலையிலும் தற்போது எந்த வியாபாரமும் இல்லாமல் அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்திசெய்தற்குக் கூட பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொண்டுவருகின்றனர்.

இவ்வாறு, ஒரு கலைஞனின் வாழ்வில் பல்வேறு துன்பங்களும் சுமைகளும் காணப்படுகின்றது. ஆனால், எங்களுக்குத் துன்பம் வருகின்ற போதும் சலிப்பு ஏற்படுகின்ற போதும் அவன் படைத்த கலைகளை இரசித்து, மனங்களை ஆற்றுப்படுத்துகின்றோம். ஆனால் இவற்றைப் படைக்கின்ற கலைஞர்களின் கஸ்டங்களை ஆற்றுப்படுத்துவது யாரோ?



கண்ணால் காணும் காட்சிகளுக்கு அப்பால் சென்று, கருத்துகளையும் உணர்ச்சிகளையும் ஊட்டுகின்ற படைப்புகளில் ததும்பும் உயிரோட்டம், அந்தக் கலைஞன் உயிர்வாழ்வதற்கும் கைகொடுக்கும் என்பது உலகநியதி; ஒருபோதும் கைவிடாது என்பது அழியாத தெய்வீகக் கலையின் வாசகம்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 10 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.